
பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 20 திங்கட்கிழமை (03-06-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:190



தீயினால் லண்டன் பக்கிங்ஹாம் அரண்மனைக்கு மேலே புகைமூட்டம்.

## பக்கிங்ஹாம் அரண்மனையில் தீ!

லண்டன்,ஜூன்3

பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் வாசஸ்தலமான பக்கிங்ஹாம் அரண்மனையின் ஒரு பகுதியில் தீ மூண்டிருக்கிறது. இதனையடுத்து அரண்மனையிலிருந்த அனைவரும் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டிருக்கின்றனர். அரண்மனையைச் சூழ நூற்றுக் கணக்கான பொலீஸாரும் தீயணைப்பு பணியாளர்களும் கூடியுள்ளனர்.

பிரிட்டிஷ் ம…ராணி இரண்டாம் எலிஸபெத் மு…டி 50 ஆண்டுகள் நிறைவடைவதை ஒட்டிய பொன்விழாக் கொண்டாட்டங்கள் ஆரம்பமாகியுள்ள வேளையில் இந்தத் தீ அனர்த்தம் ஏற்பட்டிருக்கிறது.

### பிந்திய செய்தி

தீ பரவிய சமயம் அரச குடும்பத்தவர்கள் எவருமே அரண்மனையில் தங்கியிருக்கவில்லை என்று அரண்மனை வட்டாரங்கள் உறுதிசெய்திருக்கின்றன. மகாராணி எலிஸபெத்தும் ஏனைய அரச குடும்பத்தவர்களும் பொன்விழாக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்வதற்காக அரண்மனைக்கு வெளியே நாட்டின் ஏனைய பகுதிகளில் தங்கியுள்ளனர்.

அரண்மனையின் மேற்கு ரெறஸ் (West Terrace) பகுதியின் கூரையூடாக வெளியேறிய புகை மண்டலம் அரண்மனைக்கு மேலே பரவியுள்ளது. லண்டன் மாநகரின் பல பகுதிகளில் இருந்தும் அதனை அவதானிக்க முடிந்ததாக செய்திகள் தெரிவித்தன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கில்

# கடல் வலய கட்டுப்பாடுகளை மீறினால் கடும் நடவடிக்கை!

## கண்காணிக்க தகுதி வாய்ந்த அதிகாரியை அரசு நியமிக்கும்

கொழும்பு,ஜூன்3

**வடக்கு - கிழக்கில் தளர்த்தப்பட்டிருக்கும் மீன்பிடித் தடையைக் கண்காணிக்க தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை அரசு விரைவில் நியமிக்கும். கடலில் கட்டுப்பாட்டு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் பகுதிகளுக்குள் பிரவேசிக்கும் நபர்கள், படகுகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

வடக்கு - கிழக்கு கடலில் மீன்பிடி அனுமதிக்கப்பட்டிருக்கின்ற போதிலும் கட்டுப்பாட்டு வலயங்களும் பிரகடனம் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருக்கிறது.

தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதியின்றி கட்டுப்பாட்டு வலயத்துக்குள் நபர்களோ, படகுகளோ பிரவேசிக்க முடியாது.

இந்த விதியை மீறும் எந்த ஒரு

(12ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் தொடர்ந்து அடாவடி

## சமாதானத்தைக் குழப்பும் கைங்கரியத்தில் படையினர்!

### சந்திரநேரு எம்.பி. முறைப்பாடு

அம்பாறை,ஜூன்3

அம்பாறை மாவட்டத்தில் சமாதானத்தைக் குழப்பும் படையினரின் அட்டகாசம் அதிகரித்து வருகிறது என்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அ.சந்திரநேரு எம்.பி. கூறினார். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூட்டத்தில் கலந்துகொண்ட படை அதிகாரி தெரிவித்தார்.

அமைச்சர் தயாரத்ன தலைமை வகித்த இக்கூட்டத்தில் இராணுவ, பொலீஸ் உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

சந்திரநேரு எம்.பி. அங்கு பேசியதாவது:-

வீரமுனையில் சவப்பெட்டி தயாராக வைக்குமாறு கூறியுள்ளனர். காரைதீவில் 4 அப்பாவி வாலிபர்களை பிடித்து, அடித்து பொலீஸாரிடம் கொடுத்துள்ளனர். 12 வயதுக்கு மேற்பட்டவர்களை சுடுவோம் என்றும் மிரட்டியுள்ளனர். ஒரு மாதத்துள் சமாதானம் குழம்பும் என்று கூறியுள்ளனர். இவ்வாறு, சமாதானத்தைக் குழப்பும் அவர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மீன்பிடி கட்டுப்பாடுகளுக்கு எதிராக மீனவர்கள் மீண்டும் போர்க்கொடி!

### கண்காணிப்புக் குழு அலுவலகம்முன் மறியல்

வடமராட்சி,ஜூன்3

வடமராட்சிக் கடற்பரப்பில் சுதந்திரமாகக் கடற்றொழில் செய்ய அனுமதிக்கக்கோரி வடமராட்சிப் பகுதி மீனவர்கள் எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.செயலகம் மற்றும் கண்காணிப்புக் குழு அலுவலகம் ஆகியவற்றின் முன்பாக அடையாள எதிர்ப்பு மறியற் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இது தொடர்பாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் யாழ்.அரசாங்க அதிபர், கண்காணிப்புக் குழு அதிகாரி ஆகியோருக்கு மகஜர் அனுப்பியிருக்கிறது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிககப்பட்டுள்ளதாவது:-

கடந்த 1996ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதியிலிருந்து வடமராட்சிக் கடற்பரப்பில் கம்பி வேலி போடப்பட்டு மீன்பிடிக்கும் நேரமும், தூரமும் மட்டுப்படுத்தப்பட்டது. இதனால் மீனவர்கள் தொழில் செய்ய முடியாது பெரும் சிரமமும் கஷ்டங்களும் அடைந்துவந்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் கடல் கண்காணிப்பு நேற்று முதல் ஆரம்பமானது

திருகோமலை,ஜூன்3

திருகோணமலையில் கடல் கண்காணிப்பு நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. இரண்டு கண்காணிப்பாளர்கள் இப்பணியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் கடல் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவென ஐஸ்லாந்து, நோர்வே ஆகிய நாடுகளைச் சேர்ந்த இரண்டு கண்காணிப்பாளர்கள் திருகோணமலைக்கு வருகை தந்தனர்.

இவர்கள் திருகோணமலை உட்துறைமுக வீதியில் உள்ள கண்காணிப்புக்குழு பணிமனைக்குச் சென்று நேற்று முதல் பணியில் ஈடுபட்டனர் என்று திருகோணமலை மாவட்ட கண்காணிப்புக் குழு அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-9)

## வெளிநாடுகளோடு உடன்படிக்கை செய்யமுன்னர் புலிகளின் விருப்பத்தை அறியமுயல்வது நல்லது!

### ஐ.தே.க. மத்திய குழுவிடம் அமைச்சர் மகேஸ்வரன் பிரேரணை

கொழும்பு,ஜூன்3

பாதுகாப்பு மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பாக வெளிநாடுகளுடன் உடன்படிக்கைகளைச் செய்யும் முன்னர் அது குறித்து அரசு விடுதலைப் புலிகளின் தலைமைக்கு தெரியப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்வது விடுதலைப் புலிகளோடு அரசு செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு மேலும் வலுச்சேர்ப்பதாக இருக்கும்.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் மேற்கண்டவாறு ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய குழுவிடம் கோரியுள்ளார்.

பாதுகாப்பு விடயங்களில் பரஸ்பரம் உதவிகளைப் பரிமாறிக்கொள்ளும் உடன்படிக்கை ஒன்றை அமெரிக்காவுடன் அரசு விரைவில் செய்துகொள்ள இருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

திருமலையில் உள்ள பாரிய எண்ணெய்க் குதங்களில் சிலவற்றைப் பயன்படுத்த இந்தியாவுக்கு அரசு அனுமதி அளித்திருக்கின்றது.

இந்த இரு விவகாரங்கள் குறித்தும் வெளிநாடுகளுடன் செய்துகொள்ளும் இவைபோன்ற உடன்பாடுகள் தொடர்பாகவும் அமைச்சர் மகேஸ்வரன் பிரேரணை ஒன்றை ஐ.தே.கவின் மத்திய குழுவிடம் முன்மொழிந்துள்ளார்.

ஐ.தே.கவின் மத்திய குழுவின் கூட்டம் இன்று பிற்பகல் கட்சித் தலைமையகமான ஸ்ரீகோத்தாவில் நடைபெறவுள்ளது.

அந்தக் கூட்டத்தில் அமெரிக்காவுடனான உடன்படிக்கை, திருமலை எண்ணெய்க்குதம் வாடகைக்குக் கொடுக்கும் விவகாரம் என்பன தொடர்பாக

(12ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



கண்காணிப்புகளும் கட்டுப்பாடுகளும் தொடர்கதை எண்டு சொல்லுங்கோ...

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## நன்கொடை வேலைத்திட்டத்தின் கீழ்

# சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் 80 லட்சம் ரூபா செலவில் அபிவிருத்தி

## வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளர் அறிவிப்பு

தென்மராட்சி,ஜுன்3

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினால் 2002 ஆம் ஆண்டுக்குரிய குறித் தொதுக்கப்பட்ட மாகாண நன்கொடை வேலைத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளில் எ...பது லட்சம் ரூபா செலவில் 28 அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த வேலைத் திட்டங்களுக்குரிய வேலை மதிப்பீடுகளைத் தயாரித்து அனுப்பி வைக்குமாறு அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

யாழ். பிரதேச செயலர் பிரிவில் கச்சேரி கிழக்கு வீதி, டேவிட் வீதி, சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் சண்முகானந்தா வீதி, ஐயர் வீதி, அல்லிப்பிள்ளை வீதி, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் கட்டுக்கரை வீதி, குடத்தனை மாவடி வீதி, தல்வு கலட்டி வீதி, தம்பசிட்டி வீதி, பொலி கண்டி உத்துவத்தை வீதி, கணயன் தோட்ட வீதி, தம்பசிட்டி வீதி, மதகு திருத்தம் என்பனவும் -

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் குருக்கள் மடம், சிசிலியாம் பிள்ளை வீதி, நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பூநாறி வீதி, முருகன் வீதி, இல.2 பிறவுண் வீதி 5ஆம் ஒழுங்கை, மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் மணற்காடு வீதி, கரவெட்டிப் பிரிவில் ஆர்த்தியாமலை வீதி முதலாம் ஒழுங்கை, மளவராயர் வீதி என்பனவும் -

தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் இங்கிறணை வீதி, தொந்தனை வீதி, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சடுவில் வீதி, சங்கானை பிரிவில் நாகலிங்க சுவாமி வீதி, ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் பெரியபுலம் வீதி, கோப்பாய் பிரதேச பிரிவில் மலரம் பாதை வீதி, உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஞானப்பிரகாசம் வீதி, வேலணை பிரிவில் சங்கத்தானை கோவில் வீதி என்பனவே இவ்வாறு அபிவிருத்தி செய்யப்படவுள்ளனவாகும். (எ-117)

# ஆற்றில் மூழ்கிய மூன்று சிப்பாய்களை பாய்ந்து மீட்ட அரசியல்வாதிகள்!

## இருவர் உயிர் பிழைத்தனர்; ஒருவர் மரணமானார்!

புத்தளம்,ஜுன்3

முஸ்லிம் காங்கிரஸ் தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸ், புத்தளம் நகரபிதா ஏ.எச்.எம்.ஹுசைன் ஆகியோரின் துணிச்சலால் ஆற்றில் மூழ்கிய மூன்று இராணுவத்தினரில் இருவர் காப்பாற்றப்பட்டனர்; ஒருவர் அவசர சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு விரையப்பட்டபோது அங்கு மரணமானார்.

இது குறித்து தெரிவிக்கப்படுவதாவது:-

புத்தளம் இலவங்குளம் அருகே அமைந்துள்ள இராணுவ முகாமைச் சேர்ந்த மூன்று சிப்பாய்கள் பக்கத்திலுள்ள கால ஓயா ஆற்றில் நீராடிக் கொண்டிருந்தனர். அச்சமயமம் மறுபக்கத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸ், புத்தளம் நகரபிதா ஏ.எச்.எம்.ஹுசைன் ஆகியோரும் அவர்களின் நண்பர்களும் நீராடிக்கொண்டிருந்தனர்.

சிறிது நேரத்தில் இராணுவத்தினர் அலறும் சத்தம் கேட்டது. இவர்கள் என்ன நடந்தது என்று ஓடோடிச் சென்றுபார்த்தபோது மூன்று இராணுவத்தினரும் தண்ணீர் சுழிக்குள் அகப்பட்டு தத்தளிப்பதைக் கண்டனர். அமைப்பாளர் பாயிஸும், நகரபிதா ஹுசைனும் உடனடியாகத் தண்ணீர் சுழிக்குள் பாய்ந்து மூவரையும் வெளியே கொண்டுவந்து முதலுதவிச் சிகிச்சை அளித்தனர். இரண்டு இராணுவத்தினர் காப்பாற்றப்பட்டனர்; ஒருவர் ஆபத்தான நிலையில் அமைப்பாளர் பாயிஸின் வாகனத்தில் புத்தளம் தள வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

சுமார் 20 மைல் தூரமுடைய புத்தளம் வைத்தியசாலைக்குச் சுமார் 15 நிமிடங்களில் அவ்வீரர் கொண்டு செல்லப்பட்டபோதிலும் வைத்தியசாலையில் வைத்து மரணமானார். பொல்காவலையைச் சேர்ந்த பிரஸ்தாப சிப்பாய் திருமணமாகி ஒருமாத காலமே என்பது தெரியவந்தது. (ஐ)

# துரையப்பா விளையாட்டரங்கு புனரமைப்புப் பணிகள் அடுத்த வாரம்

## முதலில் சுற்றுமதில்கள் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம்,ஜுன்3

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கைப் புனரமைத்து நவீனமயப்படுத்தும் பணிகள் அடுத்தவாரம் ஆரம்பிக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புனரமைப்பு அகதிகள் மீள்குடியேற்ற அமைச்சு இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இந்த புனரமைப்புக்கான மதிப்பீட்டுப் பணியை யாழ்.செயலக அதிகாரிகள் மற்றும் மாநகர சபையின் பொறியியலாளர்கள் அடங்கிய குழு ஒன்று அண்மையில் மேற்கொண்டிருந்தது.

அந்த மதிப்பீட்டு அறிக்கை புனரமைப்பு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சின் தலைமைச் செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டதைத் தொடர்ந்து வேலைகளை ஆரம்பிப்பதற்குரிய அனுமதி தற்போது வழங்கப்பட்டிருக்கிறது.

முதற்கட்டமாக மைதானத்தைச் சுற்றி மதில் அமைக்கும் பணிகள் அடுத்த வாரம் ஆரம்பமாகவிருப்பதாகவும் -

அதனையடுத்து ஸ்ரேடியத்துக்கு வர்ணம் பூசி அங்கு பார்வையாளர்களுக்குரிய ஆசனங்கள் பொருத்தப்படவிருப்பதாகவும் -

யாழ்.செயலக அதிகாரி ஒருவர் தகவல் தெரிவித்தார்.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா, துரையப்பா விளையாட்டரங்கிற்குச் சென்று பார்வையிட்ட பின்னர் அதன் புனரமைப்புக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு தமது அமைச்சு அதிகாரிகளைப் பணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

# குடாநாட்டிலும் 'லங்கா பெல்' தொலைபேசிச் சேவைகள்

குடாநாட்டில் 'லங்கா பெல்' என்ற தனியார் தொலைபேசி நிறுவனத்தின் தொலைபேசிச் சேவை இன்று அல்லது நாளை முதல் பரீட்சார்த்தமாக ஆரம்பமாகவுள்ளது.

ஆரம்பத்தில் பருத்தித்துறையிலும் தொடர்ந்து நெல்லியடி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் தலா ஒரு தொலைபேசி இணைப்பு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

செய்மதி மூலம் இயங்கவுள்ள இத்தொலைபேசிச் சேவைக்கான அன்ரனா அமைக்கும் பணி 'லங்கா பெல்' நிறுவனத்தினால் பருத்தித்துறையில் கடந்த இரு தினங்களாக மேற்கொள்ளப்பட்டுவந்தது. (ம-173)

# நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வை ஸ்தல ஸ்தாபன ஊழியர் பகிஷ்கரிப்பர்!

யாழ்ப்பாணம்,ஜுன்3

யாழ். மாநகர சபையில் இன்று நடைபெறவுள்ள தற்காலிக ஊழியர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வை பகிஷ்கரிக்கப் போவதாக ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்கம் அறிவித்துள்ளது.

மாநகர சபையின் நிர்வாக உத்தியோகத்தரை மாற்றுதல் உட்பட ஏழு கோரிக்கைகளை முன்வைத்து தாம் தொடர்ச்சியாக நடத்திவரும் மறியல் போராட்டம் குறித்து மாநகர நிர்வாகம் இதுவரை உரியபதில் எதனையும் வழங்கவில்லை என்றும் -

இதனை ஆட்சேபித்தே நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வைத் தாம் பகிஷ்கரிக்கவுள்ளதாகவும் -

சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-13)

## தமிழக அறிஞர்களின் இன்றைய விஜயம்

யாழ்ப்பாணம்,ஜுன்3

ஆத்மீகப் பயணத்தை மேற்கொண்டு யாழ்.வருகைதந்துள்ள தமிழக அறிஞர்கள் இன்று காலை தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை நகுலேஸ்வரம், செல்வச்சந்நிதி, வல்லிபுரக கோயில் போன்றவற்றுக்கு விஜயம் செய்து ஆலய தரிசனத்தை மேற்கொள்வர். (எ-ரி)

## புலிகளின் விளக்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜுன்3

சமகால நிகழ்வு தொடர்பான விடுதலைப் புலிகளின் விளக்கக் கூட்டம் புத்தூர் குமரகுருபரன் விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன் தினம் இரவு இடம்பெற்றது. பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் இதில் கலந்துகொண்டனர்.

புத்தூர் கிழக்கு கிராம சேவையாளர் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, அரசியல் துறைப் பிரமுகர் பாப்பா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்வில் 'கரைதேடும் ஓடம்' என்ற நாடகமும் இடம்பெற்றது. (ஒ-3)

## தரம் 5 விடைத்தாள் திருத்தும் பணிக்கு ஆள்கள் தேவை

யாழ்ப்பாணம்,ஜுன்3

2002ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டிற்கு தகுதியான ஆரம்பக்கல்வி ஆசிரியர்களிடம் இருந்து உடன் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் அந்தந்த வலயக் கல்விப் பணிமனைகளில் விண்ணப்பங்களைப் பெற்றுப் பூர்த்தியாக்கி வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக யாழ்.கல்வி வலயத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கோரப்பட்டுள்ளது. (ம-12-11)

ஜப்பான் தென்கொரியா

## உலகக் கிண்ண கால்பந்து

2002 FIFA WORLD CUP KOREA JAPAN

31.05.02 - 30.06.02





ஆர்ஜென்ரீனா வீரர் கிளாடியோ லொபெஜ் பந்தைப் பெறாமல் காலை நீட்டித் தடுக்கும் நைஜீரிய வீரர் ரரிபோ வெஸ்ற்.

# ஸ்பெயின், ஆர்ஜென்ரீனா அணிகளுக்கு வெற்றி!

சியோல்,ஜுன்3

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் ஆர்ஜென்ரீனா மற்றும் ஸ்பெயின் அணிகள் வெற்றி பெற்றன. மற்றைய இரு ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன.

முதலாவது ஆட்டம் தென்கொரியாவில் இடம்பெற்றது. பரகுவே அணியை எதிர்த்து தென்னாபிரிக்க அணி மோதியது. இரு அணிகளும் தலா இரு கோல்களை அடித்தன. ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

பரகுவேயின் சனாட்டா குரோஸ், பிரான்ஸிஸ்கோ ஆர்ஸ் ஆகியோர் தமது அணிக்காக கோல்களை அடித்தனர். இதனால் பரகுவே அணி முன்னிலை வகித்தது. தொடர்ந்து தென்னாபிரிக்க அணி வீரர் டிபோகோ மொகோனா தனது அணிக்காக ஒரு கோலை அடித்தார். பின்னர் ஆட்டத்தின் 90ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்ட்டி உதையைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்ட தென்னாபிரிக்கா மேலும் ஒரு கோலைப் பெற்றது. இதனால் ஆட்டம் 2-2 என்ற சமநிலையில் நிறைவடைந்தது.

இரண்டாவது ஆட்டம் ஜப்பானில் இடம்பெற்றது. ஆர்ஜென்ரீனா - நைஜீரியா அணிகள் மோதின. 1-0 என்ற கோல்கணக்கில் ஆர்ஜென்ரீனா அணி வெற்றி பெற்றது.

இரு அணிகளும் கடுமையாக மோதின. ஆட்டத்தின் முதல் பாதி வரைஎந்த அணியும் கோல் எதனையும் அடிக்கவில்லை. இரு அணிகளுக்கும் கிடைத்த பல சந்தர்ப்பங்களை சரிவரப் பயன்படுத்தவில்லை அவர்கள்.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் - 63ஆவது நிமிடத்தில் - ஆர்ஜென்ரீன அணியின் முன்னணி வீரர் பாடிஸ்டுடா தன் அணிக்காக ஒரு கோலை அடித்தார். இறுதியில் 1-0 என்ற கோல் அடிப்படையில் ஆர்ஜென்ரீனா அணி வெற்றி பெற்றது.

மூன்றாவது ஆட்டமும் ஜப்பானில் இடம்பெற்றது. இதில் சுவீடன் அணியும் இங்கிலாந்து அணியும் மோதின. இந்த ஆட்டமும் வெற்றி தோல்வியின்றி முடிந்தன. இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்தன.

முதலில் இங்கிலாந்து அணி வீரர் சோல் ஹம்பல் ஆட்டத்தின் 24 ஆவது நிமிடத்தில் தனது அணிக்காக ஒரு கோலை அடித்தார். பதிலுக்கு 59ஆவது நிமிடத்தில் சுவீடனின் நிக்கலஸ் அலக்ஸான்டர்ஸன் தன் அணிக்காக ஒரு கோலை அடித்து ஆட்டத்தைச் சமப்படுத்தினார்.



தென்னாபிரிக்கா - பராகுவே அணிகளிடையேயான நேற்றைய ஆட்டத்தில் ஒரு காட்சி.

நான்காவது ஆட்டம் தென்கொரியாவில் நடந்தது. ஸ்பெயின் அணியை எதிர்த்து ஸ்லோவேனியா அணி போட்டியிட்டது. இந்த ஆட்டத்தில் 3-1 என்ற கோல் கணக்கில ஸ்பெயின் அணி வெற்றிபெற்றது.

ஸ்பெயின் அணியின் ரவுல் ஆட்டத்தின் முதல் பாதியில் ஒரு அற்புதமான கோலை அடித்தார். பின் பாதியில் அந்த அணியின் கார்லோஸ் வாலோரன்ஸ் இரு கோல்களை அடித்து அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார். ஆட்டத்தின் 87 ஆவது நிமிடத்தில் சுலோவேனிய அணியின் ஆட்டக்காரர் பெர்ணான்டோ தன் அணி சார்பில் ஒரு கோலை அடித்தார். இறுதியில் ஸ்பெயின் அணி 3-1 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம)



ஸ்பெயின் - ஸ்லோவேனியா அணிகளிடையேயான ஆட்டத்தில் ஒரு காட்சி.

## இன்று நடக்கும் ஆட்டங்கள்

சியோல்,ஜுன்3

உலகக கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள், போட்டி நடைபெறும் நாடு, நேரம்(உள்ளூர் நேரம்) என்பன வருமாறு:-

★ குரோஷியா எதிர் மெக்ஸிக்கோ (ஜப்பான் - பகல் 12.30)

★ இத்தாலி எதிர் ஈக்குவடோர் (ஜப்பான் - பி.ப. 1.00)

★ பிறேஸில் எதிர் துருக்கி (கொரியா - பி.ப 3.30)

பிரிட்டிஷ் மகாராணி இரண்டாம் எலிசபெத் முடிசூடி 50 ஆண்டுகள் நிறைவடைந்ததன் பொன்விழாக் கொண்டாட்டங்கள் பிரிட்டனில் கோலாகலமாக நேற்று முதல் கொண்டாடப்படுகின்றன. இந்தச் சமயத்தில் மகாராணியின் ராஜ வாழ்கையின் சில காட்சிகள்...



1952 ஜூன் 2ஆம் திகதி முடிசூடிய மகாராணி பக்கிங்ஹாம் அரண்மனையில் மக்களின் வாழ்த்தை ஏற்கிறார்.



மகாராணி, சகோதரி ஆன் மற்றும் மகன்கள் சார்ள்ஸ், அன்ட்ரூ, எட்வேர்ட் ஆகியோருடன்.



மூத்த மகன் சார்ள்ஸுக்கு, வேல்ஸ் இளவரசராக மகாராணி பட்டம் சூட்டிய போது..



இளவரசர் சார்ள்ஸின் திருமண நிச்சயதார்த்தத்தின் போது மருமகள் டயானாவுடன் மகாராணி.



பொன் விழாவையொட்டி வழங்கப் படும் மலர்ச்செண்டுகளை மகிழ்வுடன் ஏற்கும் மகாராணி.

## தமிழக இடைத் தேர்தல்

# இரண்டு தொகுதிகளில் அ.தி.மு.கழகம் வெற்றி!

## ஒரு முடிவு அறிவிக்கப்படவில்லை

சென்னைஜூன்3

தமிழகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மூன்று சட்டப் பேரவை தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில முடிவுகள் அறிவிக்கப்பட்ட இரு தொகுதிகளிலும் ஆளும் அ.தி.மு.க. வேட்பாளர்கள் வெற்றிபெற்றனர். மற்றைய தொகுதியின் வாக்கு எண்ணிக்கை நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

வாணியம்பாடி, அச்சிறுபாக்கம், சைதாப்பேட்டை ஆகிய 3 தொகுதிகளுக்கே இடைத் தேர்தல் நடைபெற்றது.

இஸ்லாமியர்கள் அதிகம் உள்ள வாணியம்பாடியில் பிரதான எதிர்க்கட்சியான தி.மு.க. பிரபல பாடகர் நாகூர் ஹனிபாவை தனது வேட்பாளராக நிறுத்தியிருந்த போதிலும் அங்கு அ.தி.மு.க. வேட்பாளர் வெற்றிபெற்றார்.

அச்சிறுபாக்கத்தில் தி.மு.க. ஆதரவுடன் பாட்டாளி மக்கள் கட்சி போட்டியிட்டது. அங்கு அ.தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட்ட பூவராக மூர்த்தி வெற்றிபெற்றார்.

இந்த இரு தொகுதிகளுக்கும் தேர்தல் நடந்த அதேதினத்தில் வாக்களிப்பு இடம்பெற்ற மற்றொரு சட்ட மன்றத் தொகுதியான சென்னை சைதாப்பேட்டை தொகுதியின் வாக்கு எண்ணிக்கை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. நடிகவேள் எம்.ஆர்.ராதாவின் மகனும் நடிகருமான ராதாரவி அ.தி.மு.க வேட்பாளராகப் போட்டியிட்ட இந்தத் தொகுதியில் வாக்குப் பதிவின் போது முறைகேடுகள் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே வாக்கு எண்ணிக்கை நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. தேர்தல் பார்வையாளர்கள் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பித்த பின்னாதான் வாக்கு எண்ணிக்கை தொடங்குவது குறித்து முடிவெடுக்கப்படும் என்று மாநிலத் தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ளது.

இந்த இடைத்தேர்தலின்போது மூன்று தொகுதிகளிலும் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் முடிவுகள் பற்றி தலைவர்கள் கருத்து

சென்னை,ஜூன்3

தமிழகத்தில் நடந்து முடிந்த இடைத் தேர்தல் முடிவுகள் குறித்து தலைவர்கள் பலவித கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

வாணியம்பாடி, அச்சிறுபாக்கம் தொகுதிகளின் இடைத் தேர்தல் முடிவுகள் அ.தி.மு.கவுக்கு தமிழக மக்களின் ஆதரவு தொடர்ந்து நீடிப்பதையே காட்டுகிறது என தமிழக முதல்வரும் அ.தி.மு.க. பொதுச் செயலாளருமான ஜெயலலிதா தெரிவித்தார்.

'தேர்தல் முடிவுகள் மக்கள் அளித்த தீர்ப்பு அல்ல. அவர்களிடமிருந்து தட்டிப் பறிக்கப்பட்ட வெற்றி' என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்தார்.

இதேசமயம், இடைத் தேர்தல் முடிவுகள் குறித்து தி.மு.க.தலைவர் கருணாநிதி கூறுகையில், 'முறைகேடுகள் வென்றன' என்று தெரிவித்தார். (ஒ)

## மெக்ஸிக்கோவில் மோதல்; 26 விவசாயிகள் உயிரிழப்பு!

லண்டன்,ஜூன்3

மெக்ஸிக்கோவின் தென்பகுதியில் இரு கிராமத்தவரிடையே ஏற்பட்ட மோதலில் 26பேர் கொல்லப்பட்டதாக மெக்ஸிக்கோ பொலீஸார் தெரிவித்தனர்.

நிலம், தண்ணீர் ஆகிய வளங்களுக்கு உரிமை கொண்டாடுவதில் மெக்ஸிக்கோ வாசிகளிடையே இடம்பெறும் வழமையான மோதல்களில் ஒன்றாகவே தற்போதைய சம்பவம் கருதப்படுகிறது.

சண்டியாகோ சில்டாபெக் என்ற கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் தமது விவசாயப் பணிகளை முடித்து விட்டு கனரக வாகனம் ஒன்றில் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது அந்த வாகனத்தை வழிமறித்த ஆயுதமேந்திய கும்பல் ஒன்று அவர்களைக் கடுமையாகத் தாக்கியதாகப் பொலீஸார் கூறினர்.

சம்பவம் இடம்பெற்ற பகுதியில் அரசின் சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாத நிலையில் விவசாயிகள் தாம் விரும்பிய நிலப் பகுதிகளைக் கைப்பற்றி விவசாயம் செய்வது வழமையான ஒன்று எனக் கூறப்படுகிறது. அத்தகைய ஒரு நிலத் தகராறிலேயே இந்தப் படுகொலைகள் இடம்பெற்றதாக ஒகஸகா மாநில சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

வாகனத்தின் சாரதியை இறக்கி விட்டு கும்பல் விவசாயிகள் மீது சரமாரியாகச் சுட்டதாக உயிர் தப்பியவர்கள் தெரிவித்தனர். (ஒ)

## கஜக்ஸ்தான் மாநாட்டில்

# அதிபர் முஷாரப்புடன் பேச பிரதமர் வாஜ்பாய் மறுப்பு!

## பதற்றத்தை தணிப்பதில் பின்னடைவு





லண்டன்,ஜூன்3

கஜக்ஸ்தானில் இடம்பெறும் பிராந்தியப் பாதுகாபபுக் குறித்த மாநாட்டில் கலந்து கொள்ள வரும் பாகிஸ்தானிய அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப்பை நேரில சந்தித்துப் பேசப்போவதில்லை என்று அந்த மாநாடடில் பங்கேற்கும் இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் உறுதிபடத் தெரிவித்தார். இரு தலைவர்களும் நேரில் சந்திப்பதன்மூலம் இருநாடுகளிடையே உருவாகியுள்ள பதற்றம் தணியக் கூடும் என்ற எதிர்பார்ப்பு இதனால் தகர்ந்துவிட்டது.

புதுடில்லியில் இருந்து கஜக்ஸ்தானுக்குப் புறப்பட்டுச செல்லு முன்னர் செய்தியாளர்களிடம் பேசிய வாஜ்பாய், எல்லை கடக்கும் பயங்கரவாதத்தைத் தடுத்து நிறுத்த அதிபர் முஷாரப் ஆக்கபூர்வ நடவடிக்கை எடுத்தால் மட்டுமே அவருடன் பேசமுடியும் என்று கூறினார்.

மேற்படி மாநாட்டில் கலந்துகொள்ளும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், இருநாட்டுத் தலைவர்களையும் சந்தித்துப் பேசவைக்க முயற்சி மேற்கொண்டிருந்தார். முதற்கட்டமாக காஷ்மீரின் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில் இந்திய, பாகிஸ்தானியப் படைகள் பரஸ்பரம் நடத்தும் தாக்குதல்களை நிறுத்தவும், சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் ரஷ்ய அதிபர் முயற்சித்து வந்தார்.

இதேசமயம், மாநாட்டில் கலந்துகொள்ளவரும் பிரதமர் வாஜ்பாய் மற்றும் அதிபா முஷாரப் இடையே ரகசியப் பேச்சு ஒன்றை ரஷ்யாவும் சீனாவும் ஒழுங்கு செய்யக்கூடும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தகைய பேச்சில் பங்கேற்கத் தான் தயாராக உள்ளதாக அதிபர் முஷாரப் ஏற்கனவே கூறியிருந்ததை அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே தற்போதைய நிலைமையைப் போன்றே பதற்றம் நிலவிய கடந்த ஜனவரி மாதம் நடந்த 'சார்க்' மாநாட்டில் பிரதமர் வாஜ்பாயிடம் வலியச்சென்று கை குலுக்கியதன் மூலம் அதிபர் முஷாரப் ஊடகங்களில் முதலிடம் பிடிதமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## காஷ்மீர் மோதல்கள் நேற்றும் தொடர்ந்தன!

இந்திய கட்டுப்பாட்டு காஷ்மீரையும், பாகிஸ்தானியக் கட்டுப்பாட்டுக் காஷ்மீரையும் பிரிக்கும் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் நேற்றும் இருதரப்பு இராணுவத்தினரும் தொடர்ந்து பரஸ்பரம் தீவிர தாக்குதல்களை மேற்கொண்டனர்.

பாகிஸ்தானியப் படையினர் ஷெல்கள் மற்றும் மோட்டர் குண்டுகளைப் பயன்படுத்தி மேற்கொண்டுவரும் தாக்குதல்களில் தமது பகுதியில் வசித்த இரு அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், 50 பேர்வரை காயமடைந்ததாக இந்தியா கூறுகிறது.

இந்தியப் படையினரின் கடும் ஷெல் வீச்சில் சிக்கி எட்டு வயதுக் குழந்தை உட்பட இருவர் கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் தெரிவித்தது.

அமைதியை ஏற்படுத்த இராஜதந்திர நடவடிக்கைகள் தொடர்கின்ற போதும், இரு நாடுகளிடையேயான இந்த இராணுவ மோதலை தவிர்க்க முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## ஐ.நா.அதிகாரிகளை வெளியேற உத்தரவு

கிங்சாசா,ஜூன்3

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் உள்ள ஐ.நா. அமைதிகாக்கும் படை அதிகாரிகள் இருவரை தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வெளியேறி விடுமாறு அந்நாட்டின் பிரதான தீவிரவாத அமைப்பு கேட்டுள்ளது.

அந்த இரு அதிகாரிகளும் எதிர்த் தரப்பினருக்கு சாதகமாகச் செயற்பட்டதாகவும் - அவர்கள் தொடர்ந்து தங்கியிருந்தால் உயிராபத்தை எதிர்நோக்க நேரிடும் என்றும் - தீவிரவாத அமைப்பு எச்சரித்துள்ளது.

## அகதிகளுக்கான ஐ.நா.அமைப்பு ஐரோப்பிய நாடுகளுக்கு கண்டனம்

அகதி அந்தஸ்து கோருபவர்கள் தொடர்பாக ஐரோப்பிய நாடுகளும், அங்குள்ள வலது சாரிக் கட்சிகளும் மேற்கொண்டுவரும் கடும்போக்கு விவாதங்களை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் கண்டித்துள்ளது. இது ஐரோப்பிய நாடுகளில் அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்கள் அவரவர் நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்படுவதை கட்டுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஏற்ககூடிய அகதிகளின் எண்ணிக்கையைவிட தற்போது அந்த நாடுகளில் தஞ்சமடையும் அகதிகளின் எண்ணிக்கை குறைவாகவே இருப்பதாகவும் -

இதனால், தஞ்சமடையும் அகதிகளை மேலும் நல்ல முறையில் அந்த நாடுகள் நடத்த முடியும் என்றும் -

ஆனால், அப்படி நடப்பதாகத் தெரியவில்லை என்றும் - அகதிகளுககான ஐநா.தூதரகம் தெரிவித்துள்ளது.

முன்னர் குடிவரவு விதிகளில் மிகத் தாராளப் போக்கைக் கடைப் பிடித்து வந்த டென்மார்க்கில் அகதி அந்தஸ்து கோருவோருக்கான உரிமைகள் மற்றும் பயன்களைக் கட்டுப்படுத்தும் புதிய விதிகளை அந்நாட்டு நாடாளுமன்றம் அங்கீகரித்த அதேநாளில் அகதிகளுக்கான ஐநா.தூதரகம் வெளியிட்ட தற்போதைய அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அகதிகள் தொடர்பாக மிகக் கடுமையான விதிகளை இத்தாலிய நாடாளுமன்றம் விவாதித்து வருகிறது. கடந்த வியாழக்கிழமை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் உள்துறை அமைச்சர்கள் நடத்திய மாநாட்டில் சட்டவிரோதக் குடியேறிகள் தமது நாடுகளுக்குள் நுழைவதைத் தடுக்க ஐரோப்பிய எல்லைப் பொலீஸ் படை ஒன்றை அமைக்கும் திட்டம் குறித்து ஆலோசனை நடத்தினர். பிரிட்டனுக்குள் சட்டவிரோதமாக நுழைந்ததாகக் கூறப்படும் ஆயிரக்கணக்கான அகதிகளை அவர்கள் பிரிட்டனுக்குள் நுழைய முன்னர் இறுதியாகத் தங்கியிருந்த நாட்டுக்கு நாடு கடத்த திட்டமிட்டுள்ளதாக பிரிட்டிஷ் அரசு அறிவித்தது.

சில ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் சட்ட விரோதக் குடியேறிகளுக்கு எதிராக அங்குள்ள வலதுசாரிக் கட்சிகள் மேற்கொண்டுள்ள பிரசாரங்களை சமாளிக்க அந்த நாடுகளின் அரசுகள் தமது குடியேற்ற விதிகளை கடுமையாக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளன.

இதனால், ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் கோரி விண்ணப்பித்துள்ள பிறநாட்டவர்கள் கடுமையான நடவடிக்கைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

இந்த நிலையில் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் ஐரோப்பிய நாடுகளின் குடியேற்றக் கொள்கைகளை கண்டித்திருப்பது தஞ்சம் கோருவோருக்கு சாதகமான ஒரு அம்சம் எனக் கருதப்படுகிறது. (ஒ)

## றோஸ் கன்றுகள் விற்பனைக்கு

நல்ல இன றோஸ், பேப்பிள், சபீல் கலர், கிறீம் கலர் மற்றும் பல கலர் றோஸ் கன்றுகள் விற்பனைக்கு உண்டு.

*விற்பனை நிலையம்:*

**கிருஷ்ணா பாம்,** பொன்னாலை வீதி, மானிப்பாய். (4439)


# 33ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 26 - 10 - 1938



மறைவு 02 - 05 - 2002

## திருமதி சிவராசா பத்மாவதி

**அன்பின் இலக்கணமாய் அறிவின் திருவுருவாய்**
**காலமெல்லாம் கண் விழிபோல் காத்து**
**காவல் தெய்வமாய் இருந்தாய் - எம்**
**உறவுகள் ஊர்விட்டு இருந்தாலும்,**
**ஓடிவந்து உறவாட நீவிரில்லையே இன்று!**

எமது குடும்பத் தலைவியின் பிரிவால் துயருற்று இருந்தவேளையில் ஆறுதல் கூறி ஒத்துழைப்புக்கள் வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கு நன்றிகூறுவதுடன், இன்று (03.06.2002) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

*266, அரசடி வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*

கணவர்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(4443)

## மந்திகை ஆஸ்பத்திரியில் தாதியர் பற்றாக்குறை

தென்மராட்சி,ஜூன்3

மந்திகை ஆதார வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தர்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது. இவ்வைத்தியசாலையில் 93தாதிய உத்தியோகத்தர் ஆளணிக்குத் தேவையுள்ள போதிலும் 33 உத்தியோகத்தர்களே தற்போது கடமையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

10 வார்ட்டுகள், சத்திரசிகிச்சை நிலையம், கிளினிக், பல் வைத்தியம், வெளிநோயாளர் பிரிவு ஆகியவை இந்த வைத்தியசாலையில் இயங்குவதால் உத்தியோகத்தர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகம் மீண்டும் சொந்த இடத்தில்

கிளிநொச்சி,ஜூன்3

கடந்த 5 வருடங்களின் பின்னர் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகம் நேற்றுமுன்தினம் முதல் மீணடும் தனது சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

கிளிநொச்சி சிங்கள மகாவித்தியாலய வளாகத்தில் இயங்கிவந்த இந்த அலுவலகம் 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கைகளை அடுத்து இடம்பெயர்ந்து இதுவரை காலமும் அக்கராயன் மகாவித்தியாலய வளாகத்தில் இயங்கிவவந்தது. (எ-6)

## பாடசாலை மீண்டும் இயங்க ஆரம்பித்தது

கடந்த ஏழு வருடங்களாக படையினரின் கட்டுப்பாட்டிலிருந்து கடந்த வாரம் நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்ட அல்வாய் மாலி சந்தி சின்னத்தம்பி வித்தியாலயம் கடந்த புதன்கிழமை தொடக்கம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.வித்தியாலயத்தின் மைதானம் துப்புரவு செய்யப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வித்தியாலயத்தில் படையினர் நிலைகொண்டிருந்தவேளையில் வித்தியாலய மாணவர்கள் அங்குள்ள தனியார் கல்வி நிறுவனமொன்றில் கல்விகற்றுவந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-117)

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் தமிழக அறிஞர்களது உரையரங்கு

இன்று (03.06.2002) திங்கட்கிழமை மாலை 5 மணிமுதல் தமிழகப் பேராசிரியர்களது சொற்பொழிவுகள் இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புலவர் தமிழப்பன்
(அறக்கட்டளைத் தலைவர், உலகத் தமிழ் நூலகம்)
திரு.கருணைதாசன் - மதுரை,
திரு.குரு ஆறுமுகம் - சேலம்,
திரு.துரை இராமநாதன் - சென்னை,
திரு.நடேச கணேசன் - புதுவை.

ஆதீன முதல்வரின் அருளாணைப்படி
ஆதீன மேலாளர்.

(4441)

## கண்ணீர் அஞ்சலி

எமது துறையின் 4ஆம் வருட மாணவன்
**செல்வன் ந.குகபரன்**
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி கமலாவதி நவரத்தினம்

அவர்கள் 01.06.2002இல் சிவபதம் அடைந்தமையையிட்டு அவருக்கும் அவர்தம் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

யாழ்.பல்கலைக்கழகம்.
தமிழ்த்துறை, 4ஆம் வருட
தமிழ் சிறப்புக் கலை மாணவர்கள்.

(4438)

## மரண அறிவித்தல்

### செல்வி விக்ரோறியா மரியாம்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

பருத்தித்துறை, புலோலியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், திருக்குடும்ப கன்னியர் ஆங்கில பாடசாலை (ஓய்வுபெற்ற) ஆசிரியையுமான செல்வி விக்ரோறியா மரியாம்பிள்ளை (30.05.2002) வியாழக்கிழமை மட்டக்களப்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை - ஆனாசிப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தெரேசம்மா, சந்தியாப்பிள்ளை, ஞானப்பூ, மரியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை (31.05.2002) வெள்ளிக்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வி
பிரான்சிஸ்கா பிரகாசம்.

*12, சென்.ஜேம்ஸ் கிழக்கு வீதி,*
*குருநகர்,*
*யாழ்ப்பாணம்.*

(4442)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் தம்பிஐயா குமாரசாமி

(சமாதான நீதிவான்)

மலர்வு 28-07-1953
உதிர்வு 04.05.2002

*பெருங்குளத்து நாயகியின் புதல்வா...!*
*குலக்குன்றே எங்கள் குமாரா...!*
*இயற்கையை நேசித்த உன் இதயம் நின்றதும்*
*காற்றும் ஒருமுறை சுழன்று அடித்தது*
*நேற்றுவரை நீ பழகிய உறவுகள்*
*கண்ணீர் வடித்து கதறி நின்றிட*
*அம்பிகை திருவடி அடைந்து நின்றனையோ...!*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**இன்று (03.06.2002) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம் மற்றும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகியவற்றில் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

*ஆடியபாதம் வீதி,*
*மருத்துவபீட முகரி,*
*கொக்குவில் கிழக்கு.*

- குடும்பத்தினர்

(4444)

உதயன்

# பனை வளத்தைப் பாதுகாக்க வெகுஜன இயக்கம் தேவை

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் பனைமரங்கள் இராணுவத் தேவைகளுக்காக வகைதொகையின்றி கண்டபடி தறிக்கப்பட்டுவருவதை யாழ்.பல்கலைக்கழகப் பேரவை கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. இந்த அழிப்பு நடவடிக்கை உடனடியாகத் தடுத்துநிறுத்தப்பட வேண்டும் என்று நாட்டின் தலைவர்களிடமும், படைத் தளபதிகளிடமும் கோருவது என்றும் பேரவை தீர்மானித்திருக்கிறது.

வடக்கு - கிழக்கில் குறிப்பாக யாழ்.குடாநாட்டில் பிரதான வளங்களில் ஒன்றான பனைவளம் போரினால் காவு கொள்ளப்பட்டிருக்கிறது. கடந்த 15 வருடகால தீவிர யுத்தத்தில் தமிழர் பிரதேசங்களில் அழித்தொழிக்கப்பட்ட இயற்கை வளங்களில் பிரதானமானது பனைவளம். அடுத்தது தெங்குவளம். இப்போது இந்த இரண்டு வளங்களுமே பேரழிவுக்கு உள்ளாகியிருக்கின்றன.

இராணுவத்தினர் தங்களின் பாதுகாப்பு அரண்களுக்கான பிரதான பொருளாக பனைமரங்களை இனங்கண்டு கொண்ட பின்னர்தான் பனை மரங்களின் அழிவு ஆரம்பமானது எனலாம். யுத்தம் தீவிரமடையத் தொடங்க பனை அழிப்பு வேகமும் அதிகரித்தது.

முதிர்ந்த மரங்கள், வடலிகள் என்ற பேதமின்றி கண்டபடி பனைகள் வெட்டிச் சாய்க்கப்பட்டன. இயந்திர அரிவு கருவிகள் கொண்டும் புல்டோஸர்கள் போன்ற பாரிய வாகனங்கள் மூலமும் ஒரேநாளில் நூற்றுக்கணக்கு என்ற எண்ணிக்கையில் பனைகள் வீழ்த்தப்பட்டன. வைரம் பாய்ந்த முதிர்மரங்கள் துண்டாடப்பட்டு படையினரின் முன்னணி நிலைகளில் உறுதியான காப்பரணாக நிறுத்தப்பட்டன. இவற்றைவிட, தீவிர சண்டைக் களமாக மாறிய குடாநாட்டின் பிரதேசங்கள் அனைத்துமே பனைவளம் நிறைந்த இடங்களாகும். போரின்போது ஏவப்பட்ட குண்டுகள், சன்ன மழைகளில் பெரும் பகுதியைத் தாங்கித் தடுத்து நின்றவை எண்ணற்ற பனைமரங்கள்தான்.

இவ்வாறு அழிக்கப்பட்டுவந்த பனைமரங்கள் இன்று அருகிப்போய்விட்டன.

1970ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு கணிப்பீட்டின்படி யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தில் (கிளிநொச்சி உட்பட) 42 ஆயிரத்து 75 ஏக்கர் நிலப்பரப்பில் மொத்த பனைமரங்களின் எண்ணிக்கை 76 லட்சத்து 66ஆயிரத்து 634 என்று இருந்தது. இன்று அந்த எண்ணிக்கை மூன்றில் ஒரு பங்காகக் குறைந்து போய்விட்டிருப்பது அதிர்ச்சித் தகவல்.

பனைமரங்களைப் பாதுகாக்கக் காலத்துக்குக் காலம் தனிநபர்களும், பொது நிறுவனங்களும் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வந்திருப்பினும்கூட, நீடித்த போர்ச் சூழ்நிலை காரணமாக அந்த முயற்சிகள் அவற்றின் நோக்கத்தை எய்தமுடியாமல்போயின.

அழிக்கப்பட்ட பனைமரங்களுக்குப் பதிலாக மீள் நடுகைத் திட்டங்கள் குடாநாட்டின் பல இடங்களிலும் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டன. ஆனால், நடுகை செய்யப்பட்ட பனம் விதைகள் முளைத்த பருவத்திலேயே மீண்டும் அழிக்கப்படும் நிலைமை உருவாகியது.

ஒரு பனம் விதை முளைத்து வடலியாக வளர்ந்து அது கிட்டத்தட்ட பூக்கும் பருவத்தை அடைய குறைந்தது 15 ஆண்டுகள் எடுக்கும். இந்த வகையில் அழிக்கப்பட்ட பனைமரங்களை உடனடியாக ஈடுசெய்வது என்பது சாத்தியமற்றது.

பனைவளத்தைக் காப்பதற்கு அரசும், அரசு சார்பு நிறுவனங்களும் எடுத்த எல்லா நடவடிக்கைகளும் வெறும் கண்துடைப்பாகவே அமைந்தன. பனைவளத்தைப் பாதுகாக்க உருப்படியான திட்டங்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

கேட்டதெல்லாம் கொடுக்கின்ற கற்பகதரு ஒன்று தேவலோகத்தில் இருப்பதாகச் சொல்லப்படுவதுண்டு. ஆனால், நமது மண்ணில் கேட்டதை எல்லாம் கொடுக்கின்ற கற்பக தருவாக விளங்கிவருவது பனை. பண்டுதொட்டு தமிழர்கள் வாழ்வோடு இரண்டற இணைந்தவை பனைமரமும், பனந்தொழிலும்.

உணவாக, உறையுளாக, மருந்தாக, பொருளாக அனைத்தையும் அள்ளித்தருகின்ற ஒரே வளம் பனை வளம்.

அந்நியப் பொருள்கள் மீதான மோகம் பனைவளத்தின் மகத்துவத்தை மறக்கச் செய்தபோதும் இன்னமும் தமிழ்ப்பிரதேசங்களில் கிராமப்புற மக்களின் வாழ்வு ஆதாரமாக - காப்பரணாக - பனைகள் திகழ்கின்றன.

போரினால் இரைகொள்ளப்பட்டு எஞ்சி நிற்கின்ற பனைமரங்களையாவது பேணவும், அழிக்கப்பட்டவைகளுக்குப் பதிலாகப் புதிய மரங்களை வளர்க்கவும், இவற்றின்பால் மக்களின் கவனத்தை ஈர்க்கவும் இதுதான் சரியான நேரம்.

இந்தக் கட்டத்தில் -

யாழ்.பல்கலைக்கழகத்தின் புதிய பேரவை தனது முதல் கூட்டத்தில் பனைவளப் பாதுகாப்புத் தொடர்பாகத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருப்பது பாராட்டத்தக்கது.

தென்மராட்சியில் பாதுகாப்புத் தேவைகளுக்காகப் பனைமரங்கள் தறிக்கப்படுவதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகப் பனை அபிவிருத்திச் சபை அறவித்திருக்கிறது. இதுவும் பாராட்டப்படவேண்டிய துணிச்சலான நடவடிக்கை. இதுபோன்ற முயற்சிகள் தாமதிக்காமல் மேற்கொள்ளப்படவேண்டும்.

கல்விச் சமூகத்தின் ஒத்துழைப்போடு குடாநாட்டில் பனைவளத்தைப் பேணவும், பெருக்கவும் உருப்படியான திட்டங்கள் வகுக்கப்படவேண்டும். பனைவளப் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் உருவாக்கப்படவேண்டும். அதற்குப் பனைகளைப் பேணும் வெகுஜன இயக்கம் ஒன்று கட்டியெழுப்பப்படுவது அவசியம்.

இன்றே செய்வோம். அதனை நன்றே செய்வோம்!

---

### வேகக் கட்டுப்பாட்டு அளவுகள் அறிவிப்பு

# வீதிப் போக்குவரத்து ஒழுங்குகள் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படும்

## யாழ்.பொலீஸார் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்3

குடாநாட்டில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையடுத்து விபத்துக்களைத் தடுப்பதற்காக வீதிப்போக்குவரத்து ஒழுங்குகள் மிகவும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படவிருப்பதாகப் போக்குவரத்துப் பொலீஸ் பிரிவினர் எச்சரிக்கையுடன் கூடிய அறிவிப்பை விடுத்துள்ளனர்.

இதன்படி நகரப் பகுதிகளிலும் அதற்கு வெளியிலும் வாகனங்கள் செல்லக்கூடிய ஆகக் கூடுதலான வேகத்தின் அளவுகளைப் பொலீஸார் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

அந்த வேக அளவுகளின் விவரம் வருமாறு:-

★ நகரப் பகுதிகளில்:- சிறிய வாகனங்கள் மணிக்கு 32 கிலோமீற்றர் வேகத்திலும், பெரிய வாகனங்கள் மணிக்கு 26 கிலோமீற்றர் வேகத்திலும் -

★ நகருக்கு வெளியே:- சிறிய வாகனங்கள் மணிக்கு 56 கிலோமீற்றர் வேகத்திலும், பெரிய வாகனங்கள் மணிக்கு 40 கிலோமீற்றர் வேகத்திலும் -

★ 'டிராக்டர்' வகைச் சேர்ந்த வாகனங்கள் எல்லா இடங்களிலும் மணிக்கு 36 கிலோமீற்றருக்குக் குறைந்த வேகத்திலுமே செல்லவேண்டும்.

இந்த வேகக் கட்டுப்பாடுகளை மீறுகின்ற வாகனச் சாரதிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அபராதமும் விதிக்கப்படும் என்று யாழ்.பொலீஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் மோட்டார் சைக்கிள் ஓடுகிற சாரதிகள் 'ஹெல்மெற்' (தலைக்கவசம்) அணிந்திருக்கவேண்டியது அவசியமானது எனவும் -

அவ்வாறு 'ஹெல்மெற்' அணியாமல் மோட்டார் சைக்கிளைச் செலுத்துபவர்கள் பொலீஸாரிடம் பிடிபடும்போது அந்த இடத்திலேயே தண்டப்பணம் அறவிடப்படும் எனவும் -

அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ம-4)

---

### ஏனைய பிரதேச மக்களுக்கு உள்ள

# உரிமைகளும் வசதிகளும் தமிழருக்கும் வழங்கப்படும்

## சமூக நலன்புரி அமைச்சர் யாழ்நகரில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்3

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகளும் வசதிகளும் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ்மக்களுக்கும் வழங்கப்படவேண்டும். அதனை வழங்குவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையாகவே இந்த சமாதான நடமாடும் சேவை.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் சமூக நலன்புரி அமைச்சர் ரவீந்திர சமரவீர.

நேற்றுமுன்தினமும் நேற்றும் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற சமாதான நடமாடும் சேவையை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது:-

எனது அமைச்சின் மூலம் யாழ்.மக்களுக்கு இவ்வாறான உதவிகளை வழங்குவதில் நான் பெருமையடைகிறேன்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகளுடன் ஒத்ததாகவே இந்த சமாதான நடமாடும் சேவை இடம்பெறுகிறது.

வடக்கு - கிழக்கில் வாழும் மக்கள் அனைவரும் சமமாக மதிக்கப்படவேண்டும். ஏனைய இன மக்களுக்கு வழங்கப்படும் உரிமை தமிழ்மக்களுக்கும் வழங்கப்படவேண்டும்.

இந்த நடமாடும் சேவை ஏனைய மாவட்டங்களில் சிறிய அளவில் நடத்தப்பட்டாலும் யாழ்.மாவட்டத்திலேயே பெரிய, அளவில் நடத்தப்படுகிறது.

இப்பிரதேச மக்களுக்கு உதவி செய்யக்கூடிய சக்தி எமக்கு உண்டு. அச்சக்தியின் மூலம் இங்கு வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதோடு, இதுவரை காலமும் நீங்கள் பட்ட துன்பங்களைக் களைவதற்காகவே இங்கு வந்துள்ளோம் - என்றார்.

தொடர்ந்து இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன், தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் அமைச்சின் செயலாளர்கள், அதிகாரிகள் ஆகியோரும் உரையாற்றினர். (ம-4-ரி)

---

# திறந்த பல்கலை யாழ்.நிலையத்தை புனரமைப்பதற்கு ரூ.15 லட்சம் நிதி

## விரைவில் தருவதாகத் துணைவேந்தர் உறுதி

யாழ்ப்பாணம்,ஜூன்3

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலைய கட்டடப் புனரமைப்புப் பணிகளுக்காக 15 லட்சம் ரூபாவை ஒதுக்கித் தருவதாக திறந்த பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் உமா குமாரசுவாமி உறுதிமொழி அளித்துள்ளார்.

இருநாள் விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்த அவர் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையம், தொழில்நுட்பக்கல்லூரி என்பவற்றுக்குச் சென்று பார்வையிட்டதுடன், மாணவப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்ததுடன் அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண உறுதிமொழிகளையும் அளித்துள்ளார்.

அவர் அளித்த உறுதிமொழிகளின் விவரம் வருமாறு:-

★ அடுத்த ஆண்டு கட்டடப் புனரமைப்புப் பணிகளுக்கு மேலும் பணம் ஒதுக்கப்படும்.

★ புதிய கற்கைநெறிகள் அறிமுகப்படுத்தப்படும்.

★ ஏ-9 கண்டி வீதி சீராகச் செயற்பட்டால் கொழும்பு - யாழ். திறந்த பல்கலைக்கழகங்களுக்கிடையிலான தொடர்புகளை வலைப்பின்னல் முறையில் ஏற்படுத்தி பிரச்சினைகளை துரிதகதியில் அறியவும், தீர்க்கவும் வழி செய்யப்படும்.

★ அடுத்த மாதம் மீளவும் பீடாதிபதிகளுடன் வருகை தந்து புதிய கற்கைநெறிகளை ஆரம்பிப்பது தொடர்பாக ஆராயப்படும்.

44 பிராந்திய நிலையங்களைக் கொண்ட இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்துள் யாழ்.பிராந்திய நிலையத்திற்கே அவர் முதலில் விஜயம் மேற்கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-ரி)

---

## புதிய தேசிய அடையாள அட்டைகள்

கொழும்பு,ஜூன்3

தற்போது பயன்படுத்தப்பட்டுவரும் தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக இலத்திரனியல் அடையாள அட்டையை அறிமுகப்படுத்துவது தொடர்பாக அரசாங்கம் அக்கறை எடுத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் புதிய அடையாள அட்டையின் மூலம் குடிவரவு, குடியகல்வு மற்றும் வங்கி நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அடையாள அட்டைகளை வழங்குவதற்கு ஏற்படும் செலவினை வழங்குவதற்கு மலேசிய அரசு உறுதியளித்துள்ளது. இவ்விடயம் தொடர்பாக இருநாடுகளையும் சேர்ந்த உயர் மட்டக்குழு ஆராயவுள்ளதாக வும் -

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

### நாளை

வைகாசி 21
செவ்வாய்க்கிழமை
(04.06.2002)
திதி : நவமி
முன்னிரவு 10.30 வரை.
நட்சத்திரம் : பூரட்டாதி
பிற்பகல் 1.16 வரை.
சுபநேரம் : 10.22 - 11.52
ராகுகாலம்: 2.52 - 02.22
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

கேலி பேசுகையில் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். கேலியால் பலர் பெரு நஷ்டமடைந்துள்ளனர்.

---

# ஆலயக் கிணற்றில் வெடிபொருள்; தண்ணீர் இன்றி பக்தர்கள் அவதி

தென்மராட்சி,ஜூன்3

வரணி சுட்டிபுரம் கண்ணகை அம்பாள் ஆலயத்திற்கு முன்னால் உள்ள கிணற்றில் வெடிபொருள்கள் காணப்படுவதால் அக்கிணற்றைப் பாவிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் ஆலய உற்சவத்திற்குவரும் பக்தர்கள் குடிதண்ணீருக்குப் பெரும் கஷ்டங்களை அனுபவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை ஆலய உற்சவம் ஆரம்பித்ததையிட்டு கடந்த சனிக்கிழமை இக்கிணற்று நீரை இறைத்தபோது அதனுள் கிரனேட் மற்றும் வெடிபொருள்கள் காணப்பட்டதால் அருகில் உள்ள படைமுகாமுக்கு அறிவிக்கப்பட்டது. அங்கிருந்து வந்த படையினர் ஆயுதங்களை மீட்கவில்லை. அதற்குப் பதிலாக கிணற்று நீரைப் பாவிக்கவேண்டாமென அறிவுறுத்திச் சென்றனர்.

ஆலய உற்சவம் ஆரம்பிக்கப்பட்டதால் ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் குடிதண்ணீர்ப் பிரச்சினையை எதிர்நோக்குவதாகவும்-

பக்தர்களின் நலன்கருதி விரைவில் இவற்றினை மீட்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் ஆலய பரிபாலன சபையினர் தென்மராட்சி பிரதேச செயலரைக் கோரியுள்ளனர். (ம-117)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

குபேட்டா லாண்ட் மாஸ்டர் K550, K700 ஆகியன விற்பனைக்கு உண்டு. 508CC என்ஜின் தனித்தும் கொடுக்கப்படும். தொடர்பு: ஆ.இரட்ணராஜா, 83/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (4381)

தட்டச்சு வகுப்பிற்குத் தேவையான தளபாடங்களும், தட்டச்சு இயந்திரங்களும் (தமிழ், ஆங்கிலம்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 140, பலாலி வீதி, திருநெல்வேலி (பரமேஸ்வரா சந்தி அருகில்). (4346)

பிறிமா லோமன் புறொயிலர் குஞ்சுகளும் ஒருகிழமை வளர்ச்சியடைந்த கைலைன் பிறவுண் பேட்டுக் குஞ்சுகளும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மல்லிகாபதி, மானிப்பாய். (C/22355)

## பிறிமா கோழிக்குஞ்சுகள்

பிறிமா கைலைன் வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும், புறொயிலர் குஞ்சுகளும் எம்மிடம் பதிவுசெய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகள்: மாருதி ரெக்ஸ், இல.1, பஜார் வீதி, யாழ்ப்பாணம்; சிற்றி காமென்ஸ், 535A, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (4365)

## தேவை

இந்துசாதனம் பத்திராதிபர் ம.வே. திருஞானசம்பந்தர் வெளியிட்ட பொ. கைலாசபதியின் "பாலகதாவாசகம்" வரிசை உபபாடநூல் (1965 வரை) வைத்திருப்போர் தந்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: பிநடராசன், இல.313, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு. (4423)

BAIRAHA பாம் புறொயிலர் குஞ்சுகள் 45 நாள்கள் வளர்த்துத் தரக்கூடிய அனுபவம் உள்ளவர்கள் எம்முடன் தொடர்புகொள்ளவும். குஞ்சுகள் குறைந்த விலையில் விநியோகிக்கப்படும். தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (4419)

## வகுப்புகள்

தரம் 3இலிருந்து தரம் 12 வரையும், க.பொ.த. (உயர்தரம்) பரீட்சை எடுத்தவர்களுக்கும் ஆங்கில வகுப்புகள் தகுதிவாய்ந்த ஆசிரியரால் கற்பிக்கப்படும். கற்கவிரும்புவோர் கீழ்க்காணும் முகவரியில் சனி, ஞாயிறு தினங்களில் தகவலைப் பெற்றுக்கொள்ளவும். "மங்களபவன்", மானிப்பாய் வீதி, உரும்பிராய் (சந்திரோதய வித்தியாசாலை முன் ஒழுங்கை). (4429)

## தவறிவிட்டது

29.05.2002 புதன்கிழமை காரைநகரிலிருந்து கொக்குவிலுக்கு வரும்போது பித்தளையிலான ஆமைவடிவமுடைய கிண்ணம் ஒன்று தவறிவிட்டது (ஆலயத்திற்கு உபயோகமானது). கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ், ஆடியபாதம் றோட், கொக்குவில் மேற்கு. (4422)

## மேல்மாகாண சபை உறுப்பினர்கள் இங்கு வருகின்றனர்

கொழும்பு,ஜூன்3

மேல்மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் மூன்றுநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருகின்றனர்.

புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவின் ஏற்பாட்டில் வரும் இவர்கள் குடாநாட்டில் பல பகுதிகளுக்கும் சென்று மக்கள் நிலை குறித்து அறிவர். (ம-3)


## வெற்றுச் சோடாப் போத்தல்கள்

கொக்காகோலா, பன்ரா, ஸ்பிறைற், போட்டல்லோ வெற்றுச் சோடாப் போத்தல்கள் கொள்வனவு செய்யப்படும்.

*விவரங்களுக்கு:*
**சிற்றி ஹாட்வெயர் & ஸ்ரோர்ஸ்**
55, 57, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 2901 (4430)


## நல்லூர் பிரதேச சபை
## காணி கொள்ளல் அறிவித்தல்

இதனகத்து அட்டவணையில் விவரிக்கப்படும் ஆதனத்தை திருநெல்வேலிச் சந்தையின் எதிர்கால அபிவிருத்தித் தேவைகளுக்காகக் கொள்வனவு செய்வதற்கு நல்லூர் பிரதேச சபை தீர்மானித்துள்ளது. தற்போது தொல்புரம் கிழக்கு, சுழிபுரம் என்னும் முகவரியில் வசிக்கும் திருமதி நளாயினி நந்தகுமாரன் ஆகியவர் கீழ் விவரிக்கப்படும் ஆதனத்திற்கான உரிமை கோரியுள்ளார்.

இவ்வாதனத்திற்கு சட்டபூர்வ உரிமை கோருவோர் வேறு எவராவது இருப்பின் அவர்கள் தமது உரிமைக் கோரிக்கைகளுக்கான ஆதாரங்களுடன் 20.06.2002ஆம் திகதிக்கு முன்னர் இப்பணிமனைக்குக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் *"தலைவர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்"* என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு இத்தால் அறியத்தருகின்றேன். குறித்த கால அவகாசத்தின் பின்னர் கிடைக்கும் உரிமைக்கோரிக்கைகள் கவனத்திற்கு எடுக்கப்படமாட்டாது.


### அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், நல்லூர் கோயில் பற்று, திருநெல்வேலி இறை "வட்டுவாவத்தை" பர.நிலை, இலா. 4, 1/2ஆம் கிணறும் வான்பயிர் செய்பயிர்களும், இந்தப் பரப்பு நிலை இலாச்சம் நாலரைக்கும் எல்லை கிழக்கும் மேற்கும் ஒழுங்கை, வடக்கு சின்னப்பா பரமேஸ்வரியின் ஆதனம், தெற்கு சிவசுப்பிரமணியம் பெண் புஷ்பகாவல்லியின் உரிமைக்காரரின் ஆதனம் இவ்வெல்லைப்படி இதடங்கலும், ஆனால் குறித்த கிணற்றில் மற்றைய பங்காளருக்குரிய தண்ணீப பங்கு புறநீங்கல்.

க.மணிபல்லவராஜன்
(ஜே.பி.யு.எம்.)
தலைவர், நல்லூர் பிரதேச சபை.

*நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகம்,*
*திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.* (சு-22372)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 18 - 05 - 1926

உதிர்வு 19 - 05 - 1998

அமரர்
### வினாசித்தம்பி சோமாஸ்கந்தர்

திதி: 03.06.2002

*அன்பின் திருவுருவே!*
*பாசத்தின் உறைவிடமே!*
*அன்பின் குலவிளக்கே!*
*ஆண்டுகள் நான்கு சென்றாலும்*
*ஆறாது எம்துயரம்!*

உங்கள் ஆத்மசாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கும்:
*புலோலி கிழக்கு,* *பருத்தித்துறை.* (4415)
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### திருமதி கனகாம்பிகை அருணாசலம் (இராசா)

*வேலணை கிழக்கு, வேலணை.*

**அன்புடன் எம்மை அரவணைத்து, பண்புடன் பாரினில் வாழவைத்த எமது அன்புத் தெய்வத்திற்கு எம் இதயம் நிறைந்த அஞ்சலிகள்.**

04.05.2002 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தாயாரின் மறைவையொட்டிய அனுதாபத்துடன் நேரில்வந்து இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், தொலைபேசி, தந்தி, கடிதம் மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையம் சாத்தி, கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் எமது நன்றியைக் கூறுவதுடன், அமரரது அந்தியேட்டி 01.06.2002 சனிக்கிழமை வில்லூன்றியிலும், இன்று (03.06.2002) திங்கட்கிழமை வீட்டுக்கிருத்தியம் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவிருப்பதால், அவரது வீட்டுக்கிருத்திய ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
*117/4, அரசடி வீதி,* *கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*
**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.** (4427)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17 - 09 - 1922

மறைவு 13 - 06 - 2001

### அமரர் சிவசுப்பிரமணியம் சிவஞானம்

*(நயினாதீவு மகா வித்தியாலய முன்னாள் ஆங்கில ஆசிரியர்)*

திதி: 03.06.2002 (அபரபக்க அட்டமி)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்த அன்புத் தெய்வமே! நீங்கள் மறைந்து ஒருவருடம் சென்றாலும் உங்கள் பாசம் எங்களைவிட்டு நீங்காது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல முருகப் பெருமானை வேண்டுகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*K.K.S.வீதி,* *மருதனார்மடம்.*
என்றும் பாசமுள்ள:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (4410)

## முதலாம் வருட நினைவஞ்சலி



மலர்வு 18 - 06 - 1933

உதிர்வு 15 - 05 - 2001

### அமரர் க.மாணிக்கம்

*(துவிச்சக்கரவண்டி திருத்துநர் - நெல்லியடி)*

**அன்பு நிறைந்த முகம்**
**ஆதரவான பண்பு**
**வானையே அளக்கவல்ல**
**வலிவான அறிவாற்றல்**
**போனதோ எம்மைவிட்டு**
**ஓராண்டு ஆனபோதும்**
**தீராத சோகமப்பா! - உங்கள்**
**பாதாரவிந்தங்களைப் பணிகின்றோம்.**
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*"வசந்தமஹால்,* *மத்தொனி,* *கரவெட்டி தெற்கு, கரவெட்டி.*
*உங்கள் பிரிவால் துயருறும்:*
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர். (C/22373)

உ
ஓம் வீராட் விஸ்வப் பிரம்மனே நம
## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்திபானு வருடம் வைகாசித் திங்கள் 22ஆம் நாள் (05.06.2002) புதன்கிழமை காலை 8.49 மணிமுதல் 10.45 மணிவரையுள்ள உத்தரட்டாதி நட்சத்திரமும் கடக லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

எங்கள் சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**உதயகுமாரன்**
அவர்களுக்கும்

எங்கள் புத்திரி
திருநிறை செல்வி
**தர்சினி**
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி சண்முகநாதன் குடும்பம்,
*"ஞான தீபம்"*
*பத்திரகாளி கோயிலடி, சுழிபுரம்.*

(இருவீட்டார் அழைப்பு)

திரு.திருமதி கெங்காதரன் குடும்பம்,
*அம்பலவாணர் வீதி,*
*காளி கோயிலடி, உடுவில்.* (C/22367)

# செய்திக் கொத்து

## மக்கள் அச்சம்!

காரைநகர்,ஜூன்3

காரைநகர் 'கசூரினா பீச்' வீதிகளில் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் அங்கு சுற்றுலாவுக்கு வருவோரின் நடவடிக்கைகளினால் அச்சமடைந்துள்ளனர்.

பொழுதைக் கழிக்கும் நோக்குடன் 'பீச்'சிற்கு வருவோர் மதுபோதையில் வாகனங்களை செலுத்துவதால் விபத்துக்கள் அதிகரித்து வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இவ்வாறு வரும் பயணிகள் தங்கள் உடைமைகளைத் தொலைத்துவிட்டுச் செல்வதாகவும் அவ்வாறு தொலைத்த அடையாள அட்டைகள் பல காரைநகர் வடகிழக்கு கிராமசேவகரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-13-73)

## பட்டம் வழங்கி கௌரவிப்பு!

யாழ்ப்பாணம்,ஜூன்3

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதி விநாயகர் தேவஸ்தானத்தில் கடந்த சித்திரை மாதம் நடைபெற்ற மஹோற்சவ நிகழ்வில் சிறப்பாக பணியாற்றியோருக்கு கௌரவப் பட்டங்கள் வழங்கப்பட்டன.

பிரதம குரு பிரம்மஸ்ரீ கா.குஹானந்தக்குருக்களுக்கு 'சிவாகம கிரியா ஜோதி' என்ற பட்டமும், உதவி அர்ச்சகர் பிரம்மஸ்ரீ ம.மகேந்திரசர்மாவிற்கு 'வேதகான மணி' என்ற பட்டமும், நாதஸ்வர வித்துவான் மகேந்திரனுக்கு 'கானபூபதி' என்ற பட்டமும், உற்சவ காலத்தில் ஆன்மீக சொற்பொழிவாற்றிய ஜெ.கோகலேக்கு 'முத்தமிழ் மணி' என்ற பட்டத்துடன் பொன்னாடை, தங்கப்பதக்கம், வாழ்த்துப்பா என்பனவும் வழங்கப்பட்டன. (ம-13)

## 5ஆயிரம் பனை மரங்கள் அழிப்பு

கொடிகாமம்,ஜூன்3

கச்சாய் கிராமத்தில் இதுவரை ஐயாயிரம் பனை மரங்களும், 2ஆயிரம் தென்னை மரங்களும் இராணுவத்தினரால் தறிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இன்று நிலவும் அமைதிச் சூழ்நிலையிலும் இத்தறிப்பு நடவடிக்கையை இராணுவத்தினர் மேற்கொண்டுள்ளனர் என்றும், அதனை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ம-13-ரி)

## பீடாதிபதி தெரிவு!

யாழ்ப்பாணம்,ஜூன்3

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் பீடாதிபதியாக மீண்டும் எம்.நடராஜசுந்தரம் பதவியேற்றார்.

பீடாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட இவர் 3 வருட காலத்திற்கு பதவி வகிப்பார் என் தெரிவிக்கப்படுகின்றது. (ம-13)

## பொருள்கள் அன்பளிப்பு

சங்கானை,ஜூன்3

சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க லண்டன் கிளையின் தலைவர் ம. ஜெயகாந்தன் ரூபா 16ஆயிரம் பெறுமதியான அலுமாரியை பாடசாலைக்கு அன்பளிப்பு செய்துள்ளார்.

மேலும் புனர்வாழ்வு அமைச்சின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தியாகாத நிலையில் இருக்கும் மூன்றுமாடிக் கட்டடப் பணியை பார்வையிட்ட அவர், அந்த வேலைகளை முடிக்க லண்டன் கிளை மூலம் நிதி சேகரித்து அனுப்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்குறித்த சேவையினை பாராட்டி பாடசாலைச் சமூகம் இவருக்கு நினைவுக் கேடயம் வழங்கிக் கௌரவித்துள்ளது. (ம-13-29)

## எச்சரிக்கை

செம்பியன்பற்று,ஜூன்3

யாழ்.குடாவில் தற்போது தரமற்ற கோழிக்குஞ்சுகள் விற்பனை செய்யப்படுகின்றன. இக்கோழிக்குஞ்சுகளை வாங்கி வளர்ப்பதனால் ஏனைய கோழிகளுக்கு பல விதமான நோய்கள் தொற்றி அழிந்து போகும் ஆபத்து ஏற்படலாம் என பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி எஸ்.வசீகரன் எச்சரித்துள்ளார். (ம-13-ரி)

---

### வவுனியாமுதல் யாழ்ப்பாணம்வரை

# ஏ-9 வீதியை திருத்தியமைக்க ஒரு வருட காலம் செல்லும்

வவுனியா,ஜூன்3

ஏ-9 கண்டி வீதியில் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரையான பாதையைத் திருத்திப் புனரமைக்க ஒரு வருடம் செல்லும் என்று வீதி அதிகார சபையின் வவுனியா அலுவலக பொறியியலாளர் சி.வதனகுமார் தெரிவித்துள்ளார்.

இந்தப் பாதையைப் புனரமைக்கும் பணி தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் -

இந்தப் பணிக்கு முதற்கட்டமாக 2 கோடி 50 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் -

முழுமையாக இந்தப் பாதையைப் புனரமைக்க 50 கோடி ரூபா தேவையாக உள்ளது என்றும் -

இதற்கான உதவியை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கும் என நம்புகிறோம் என்றும் - அவர் தெரிவித்தார். (ம-3)

## வடமராட்சியில் வாகனங்கள் பதியப்படுகின்றன

வடமராட்சிப் பகுதிக்குள் இரவு 7 மணிக்குப் பின்னர் உள்நுழையும் வாகனங்களைப் பதிவுசெய்யும்பணி படையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வாகனங்களின் இலக்கம், பயணம் செய்வோர் தொகை போன்ற விவரங்களைப் படையினரும் பொலீஸாரும் இணைந்து பதிவுசெய்கின்றனர்.

வல்லை, முள்ளி, யார்க்கரு, வலலிபுரக் கோயில் ஆகிய பகுதிகளில் உள்ள சோதனைச்சாவடிகளில் இவ விவரங்கள் பதிவுசெய்யப்படுகின்றன.

# பிரதேச சபைத் தலைவருக்கு எதிராக இரண்டு வழக்குகள்

யாழ்ப்பாணம்,ஜூன்3

வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர் க.கமலசேகரனுக்கு எதிராக இரு வழக்குகள் சுன்னாகம் பொலீஸாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளன.

கடந்த பொதுத்தேர்தலுக்கு முன்னர் ஐ.தே.கட்சி வேட்பாளரான சபையின் முன்னாள் தலைவர் தி.மா.செல்வராசாவைக் கொலை செய்யப்போவதாக அச்சுறுத்தியமை, தகாத வார்த்தைகளால் பேசியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரிலும் -

செல்வராசாவின் சாரதியான முன்னாள் பிரதேச சபை சாரதியான அரியமுத்து திருச்செல்வம் என்பவரை தாக்கிய குற்றச்சாட்டின் பேரிலும் -

கமலசேகரனுக்கு எதிராக இரு வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

முதலாவது வழக்கில் எதிர்வரும் 27ஆம் திகதி அவரை மன்றில் ஆஜராகும்படி மல்லாகம் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இரண்டாவது வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜரான அவரை ஆயிரம் ரூபா பிணையில் செலல அனுமதித்த மல்லாகம் நீதிவான் பா.சுப்பிரமணியம் வழக்கை ஓகஸ்ட் மாதம் 29ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஒ-3)

## புதிய நீர்த்தாங்கி அமைக்கும் பணி ஆரம்பம்

திருநெல்வேலி சந்தைக்கு ஆறாயிரம் லீற்றர் கொள்ளளவுடைய நீர்த்தாங்கி அமைக்கும் பணி நல்லூர் பிரதேச சபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சந்தைக் கட்டடத்திற்கு ஏற்கனவே ஒரு நீர்த்தாங்கி இருக்கின்றபோதிலும் புதிதாக அமைக்கப்பட்ட கடைத்தொகுதிகளுக்கு விநியோகிப்பதற்கு அதிலிருக்கும் நீர் போதியதாக இல்லை. மேற்படி குறையை நீக்குமுகமாகவே புதிய நீர்த்தாங்கி அமைப்பு வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் தெரிவித்தார். மேற்படி சந்தை கட்டடத்தில் புதிதாக மலசலகூடம் அமைப்பதற்கான ஆரம்பவேலைகளும் தொடங்கப்பட்டுள்ளன. (ம-69)

# பத்திரிகையாளர் சங்கத்துக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்3

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்துக்கு ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்களை 'வேஜோ பவுண்டேஷன்' நிறுவனம் அன்பளிப்பாக வழங்கியது.

யாழ்.சிற்றி ஹோலில் நடந்த வைபவம் ஒன்றில் வைத்து அந்த நிறுவனத்தின் இன முரண்பாடு தொடர்பான கல்வித்துறைப் பணிப்பாளர் கலாநிதி நோபேட் றொப்பர்ஸ் அந்த உபகரணங்களை வழங்கினார்.

சங்கத்தின் தலைவர் எஸ்.கதிர்காமத்தம்பி தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் சமயப் பிரமுகர்கள், பொதுஅமைப்புக்களின் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பருத்தித்துறை இராமகிருஷ்ண ஆச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா, அருட்திரு பேர்னாட், யாழ்.ப.நோ.கூ.சங்கத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, தேசிய சமாதான பேரவை உதவிச் செயலாளர் பி.நிமலன் கார்த்திகேயன் ஆகியோர் உரையாற்றினர்.

இரு கணனிகள், 'பக்ஸ்' இயந்திரம், தட்டச்சு இயந்திரம், போட்டோ பிரதி இயந்திரம் ஆகியவையே பத்திரிகையாளர் சங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளன. (ஒ-3)




வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்க அலுவலகத்துக்கு இலத்திரனியல் உபகரணங்களை அன்பளிப்புச் செய்யும் நிகழ்வில் 'வேஜோ' பவுண்டேசன் நிறுவன இனமுரண்பாடுகள் தொடர்பான கல்வித்துறைப் பணிப்பாளர் நோபேட் றொப்பர்ஸ் உரையாற்றுவதை முதலாவது படத்திலும் சங்கத் தலைவர் எஸ்.கதிர்காமத்தம்பி உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, வண. பேர்னாட் அடிகளார் ஆகியோரும் காணப்படுகின்றனர். *(படங்கள் : அற்புதன்)*

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

# பாடசாலைகளுக்கு அருகில் முகாம்கள் மாணவர் கல்வி கற்க முடியாத நிலை

## கல்விப் பணிப்பாளர் கவலை

மட்டக்களப்பு,ஜூன்3

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினர் வெளியேறிய பாடசாலைகளுக்கு அருகில் தொடர்ந்தும் முகாம்கள் இயங்குவதால் மாணவர்கள் கல்வி பயில முடியாத நிலை உள்ளது.

மட்டக்களப்பு கல்வி வலயப் பணிப்பாளர் எஸ்.பவளகாந்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

படையினரிடம் இருந்து பாடசாலைகளைக் கையேற்ற பின்னர் அவர் இதைப் படை அதிகாரிகளிடம் தெரிவித்தா.

படையினர் பாடசாலைகளை விட்டு வெளியேறியபோதும் அருகில் முகாம் அமைத்துத் தங்கியுள்ளனர். இதனால் மாணவர்கள் அச்சத்துடனேயே கல்விபயில வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதன்ால் படையினர் வெளியேறிய போதும் அங்கு பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாதநிலை ஏற்படடுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## விதவைகளுக்கு உதவிகள்

கொழும்பு,ஜூன்3

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏழை விதவைகளுக்கு உதவும் நோக்கோடு தனியார் துறையினர் நிதி உதவி வழங்க உள்ளனர்.

முதற்கட்டமாக 108 விதவைகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு பிணையின்றி சுயதொழில் கடன் வழங்கப்படவுள்ளது. (ம-12)

## தென்மராட்சி அதிபர்களுக்கான செயலமர்வு

தென்மராட்சி,ஜூன்3

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான பாடசாலை தொகை மதிப்புச் செயலமர்வு நாளைமறுதினம் 5ஆம் திகதி புதன்கிழமை பின்வரும் இடங்களில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர்களுடன் முகாமைத்துவ உதவியாளர்களை அல்லது மேற்படி படிவங்களை பூரணப்படுத்தும் ஆசிரியர்களை சமுகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

கொடிகாமம் - பளை கோட்ட அதிபர்களுக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் காலை 9.00 மணிக்கும் -

சாவகச்சேரி கோட்ட அதிபர்களுக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பி.ப. 2.00 மணிக்கும் செயலமர்வு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-117)

# குடாநாட்டில் மீண்டும் பாலைப்பழம்

யாழ்ப்பாணம்,ஜூன்3

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் குடாநாட்டுச் சந்தைகள் மற்றும் பொதுஇடங்களில் பாலைப்பழம் விற்பனை செய்யப்பட்டு வருவதைக் காணமுடிகிறது.

வன்னியிலிருந்து கண்டி வீதியூடாக இங்கு எடுத்துவந்து விற்பனை செய்யப்படும் பாலைப்பழத்துக்கு குடாநாட்டு மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை -

தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் வருவோர் பனம்பழம் மற்றும் பனம்பழத்திலிருந்து தயாரிக்கப்படும் உணவுப் பண்டங்கள், பனம் கைப்பணிப் பொருள்கள் என்பவற்றை இங்கிருந்து விரும்பி வாங்கிச் செல்வதையும் அவதானிக்க முடிகிறது. (ம-4-ரி)

# பலாலி - இரத்மலானை இடையே புதிய தனியார் விமான சேவை

## இன்றுமுதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன்3

இரத்மலானைக்கும் பலாலிக்கும் இடையே எக்ஸ்போ எவியேஷன் நிறுவனத்தின் விமான சேவை இன்று ஆரம்பமாகின்றது.

இரத்மலானையில் இருந்தும், பலாலியில் இருந்தும் இந்த நிறுவனம் தினமும் ஒரு சேவையை நடத்த உள்ளது. இந்த விமானத்தில் 90 பயணிகள் செல்ல வசதியுள்ளது.

நாற்பது நிமிடத்தில் இரத்மலானையில் இருந்து பலாலிக்கு வரும இந்த விமானத்தில் சிற்றுண்டிகளும் வழங்கப்படும். சர்வதேச தரத்தில் இந்த விமானத்தில் வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(ம-3)

### குருநகர்ப் பகுதியில்

# டேவிற் வீதியின் நடுவில் முளைக்கும் வாழைகள்

குருநகர்,ஜூன்3

குருநகர், டேவிற் வீதி புனரமைக்கப்படாமல் தொடந்து புறக்கணிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதி மக்கள் வீதியின் நடுவில் வாழை மரங்களை நட்டு வருகின்றனர்.

இந்த வீதியை திருத்தித் தருமாறு இப்பகுதி மக்கள் பல தடவைகள் மாநகரசபையிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். ஆனால் வீதி திருத்தப்படவில்லை. இதனால் ஆத்திரமடைந்த மக்கள் வீதியின் கரையோரங்களில் வாழைகளை நட்டு தமது எதிர்பைத் தெரிவித்தனர். அவ்வாறு நடப்பட்ட வாழைகள் தற்போது செழித்து வளர்ந்துள்ளன.

தமது எதிர்ப்பு நடவடிக்கை புறக்கணிக்கப்பட்டதால் மேலும் ஆத்திரமடைந்த மக்கள் தற்போது வீதியின் நடுவில் பள்ளங்களைத் தோண்டி அவற்றில் வாழைக் குட்டிகளை நட்டு வளர்க்க ஆரம்பித்துள்ளனர். அத்துடன் வாழை மரங்களை வெட்டி வீதியின் குறுக்காகப் போட்டு அதனூடான போக்குவரத்தையும் தடைசெய்து வருகின்றனர். (ம-51)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

03-06-2002

HAPPY BIRTHDAY



### செல்வன் உதயசங்கர் அகில்

ஜேர்மனியில் வசிக்கும் **உதயசங்கர் - கவிதா** தம்பதிகளின் செல்வப் புதல்வன் **அகில்** தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (03.06.2002) திங்கட்கிழமை தனது இல்லத்தில் வெகு குதூகலமாகக் கொண்டாடுகின்றார். அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்திமார்களான சங்கீதா, நம்மி மற்றும் சகல உறவினர்களும் அகில் குட்டியை வைரவர் அருளால் பலகலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

*கண்டி வீதி,*
*சாவகச்சேரி.* (4274) **க.சங்கீதா (சித்தி).**

## விற்பனைக்கு உண்டு

**CANON NP 1215 RECONDITION போட்டோ கொப்பியர்கள், Laminators, Faxes, Binders, Paper Cutters எல்லா இன போட்டோ கொப்பியர்கள், கொம்பியூட்டர் பிரின்டர்களுக்கான ரோனர்கள், உதிரிப்பாகங்கள் இப்பொழுது யாழ்ப்பாணத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.**

தொடர்பு கொள்க:
**Peace Lanka (Pvt.) Ltd,**
26, Castle lane, Colombo - 4;
247, Galle Road, Colombo - 4
Tel: 582320, 586479, 072 263778.
(C-22371)

## தொடர்பாடல் அமைச்சு அதிகாரிகள் வருகை

யாழ்ப்பாணம்,ஜூன்3

மக்கள் தொடர்பாடல் அமைச்சின் ஏற்பாட்டில் எதிர்வரும் 15ஆம், 16ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள நடமாடும் சேவைகள் தொடர்பான ஒழுங்கமைப்புக்களை மேற்கொள்ள அமைச்சின் உயர் அதிகாரிகளைக் கொண்ட குழு யாழ்.செயலகத்திற்கு வருகைதந்திருந்தது.

பிரதி அஞ்சல் மாஅதிபர் சேனாதீர, அமைச்சின் மேலதிக செயலாளர் சுமணபால, கணக்காளர் கே. வீரசிங்கம் ஆகியோரே வருகைதந்தவர்கள் ஆவர். இவர்கள் யாழ்.செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கத்தை சந்தித்து நடமாடும் சேவைக்கான ஒழுங்குகளைச் செய்தனர்.

இந்த நடமாடும் சேவையில் கலந்துகொள்வதற்காக மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எதிர்வரும் 15ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளார். அன்றையதினம் அவர் யாழ்ப்பாணத்திலுள்ள சகல மதத் தலைவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடுவதோடு யாழ்.பிரதம அஞ்சல் அலுவலகத்தில் பொதுமக்களின் நன்மைகருதி ஆரம்பிக்கப்படவுள்ள போட்டோப் பிரதி எடுத்தல், கவரிடும் சேவை, பக்ஸ், தொலைபேசி சேவை என்பனவற்றை சம்பிரதாய பூர்வமாக மேற்கொள்வார் என்று அக்குழுவினர் தெரிவித்தனர். (ம)

## நல்லூர் பகுதியில் வீதிகள் திருத்தப்படுகின்றன

கொக்குவில்,ஜூன்3

நல்லூர் பிரதேச சபையால் 2002 ஆம் ஆண்டு வேலைத் திட்டத்தின் கீழ் சில வீதிகள் திருத்தியமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் வராகி அம்மன் வீதி, கொக்குவில் மஞ்சவனப்பதி வீதி, கோண்டாவில் கிழக்கு ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு செபஸ்தியார் ஆலடி வீதி, நல்லூர் கிழக்கு முக்குறுணிப் பிள்ளையார் வீதி ஆகியவற்றைத் திருத்தும் பணிகளே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.(ம-69)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 - 08 - 1938



உதிர்வு 29 - 05 - 1997

### அமரர் துரைச்சாமி சச்சிதானந்தம்

**திதி: 03-06-2002**

**உங்கள் நினைவுகளில் என்றென்றும் வாழ்ந்திடுவோம்.**

*89, கிருஷ்ணபிள்ளை லேன்,*
*ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.* (4390) - குடும்பத்தினர்.

## 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணகம் 26 - 08 - 1929



விண்ணகம் 03 - 06 - 1982

அமரர்

### இறப்பியேல்பிள்ளை அன்ரனிரட்ணம்

(பிரதம லிகிதர்,பிரதேச அலுவலகம்)

**கருணைக் கடலின் இறைவா!**

**உமது பாத நிழலில் சரணடைந்த இவரின் ஆன்மாவிற்கு நித்திய ஒளியை அருளி உமது பேரின்ப வான் வீட்டில் சேர்த்தருள வேண்டுகிறோம்.**

*சூராவத்தை,*
*சுன்னாகம்.* (C-22338) **-மனைவி.**


# தரம் குறைந்த இரும்பினை வாங்கினால் வாழ்நாள் முழுதும் வருந்த நேரிடும்

நீளம் குறைந்த, பாரம் குறைந்த, சக்தியற்ற, சுற்றுவட்டம் குறைந்த, உத்தரவாதமற்ற, தரம் குறைந்த, இரும்பை வாங்கி உபயோகிக்காதீர்கள்

அசல் "ஹயட் ஸ்டீல்" இரும்புக் கம்பிகளில் HS முத்திரை இடப்பட்டிருக்கும். "ஹயட் ஸ்டீல்" இரும்பு வடக்கிலும் கிழக்கிலும் கட்டிடம் கட்டுவதற்கும் இன்னும் பல வேலைகளுக்கும் மிகவும் உகந்ததென கட்டிடத் திணைக்களத்தினால் அத்தாட்சிப் படுத்தப்பட்டிருக்கிறது




## ஹயட் ஸ்டீல்ஸ் (பிரை) லிமிட்டட்

762, மருதானை வீதி, கொழும்பு 10.
தொலைபேசி: 696644, 075-367396, 075-338956-7 .:பெக்ஸ்: 696633 ஈமெயில்: tho@eureke.hialk
தொழிற்சாலை: பெலஹெல, தெகட்டன, தொலைபேசி: 571594, 571890 பெக்ஸ்: 571890
விற்பனையாளர்களுக்கும் தயாரிப்பு விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்: 071-729708

"ஹயட் ஸ்டீல்" இரும்பு
யாழ்ப்பாணத்தில்ஏக விநியோகத்தர் மற்றும் முகவர்
**ஜெசிபா ஏஜன்ஸ்**
132, ஸ்ரென்லி வீதி, யாழ்ப்பாணம்.

# தமிழ்மக்களின் மற்றொரு யமன் புதைக்கப்பட்டுள்ள கண்ணிகள்!

**யுத்தத்தில் ஈடுபடும் இருதரப்பாரும் பயன்படுத்தும் மிக மலிவான ஆனால் மிக ஆபத்தான யுத்த உபகரணம் கண்ணிவெடிகளாகும். யுத்தம் முடிவடைந்ததும் துப்பாக்கிகள் ஓய்வெடுக்கின்றன. ஆனால் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் யுத்தம் முடிவடைந்த பின்னரும் மக்களைக் குறிப்பாக தமிழ்மக்களைப் பலிகொள்கின்றன. கண்ணிவெடிகளை அகற்றுவது தொடர்பாக பாலித அமரசூரியா என்பவரால் எழுதப்பட்டு "லக்பிம" சிங்கள வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

## இலங்கையில் உள்ளவற்றை அகற்றிமுடிக்க 400 நிபுணர்களைக் காவு கொடுக்கவேண்டும்

**ஏ-9** எனப்படும் யாழ்-கண்டி நெடுஞ்சாலை திறக்கப்பட்டதை அடுத்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வரும் அவசர நோயாளிகளின் தொகை அதிகரித்துள்ளது. நெடுஞ்சாலையின் இருபக்கங்களிலும் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளில் மிதித்து கை, கால்களை இழந்து தினசரி இருவர், மூவர் என்ற விதத்தில் ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்படுகின்றனர்.

யுத்தநிறுத்தம் நடைமுறையில் உள்ள இந்தவேளையில், யாழ்ப்பாண மக்களுக்குள்ள பாரிய பிரச்சினை இந்த நிலக் கண்ணிவெடிகளாகும். யுத்தத்தை நிறுத்தி இயல்பு வாழ்க்கையை மேற்கொள்ள முனைந்த முன்னைய சந்தர்ப்பங்களைப் போலவே இம்முறை விடுதலைப் புலிகளும் சிறிலங்கா அரசும் நிலக் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

### அமெரிக்கப் பங்களிப்பு

இந்த முயற்சிகளுக்கு தற்போது அமெரிக்கா ஒத்துழைப்பை வழங்கியுள்ளது. அமெரிக்க அரசின் செலவில் யாழ்.குடாநாட்டிலுள்ள நிலக் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு மொசாம்பிக் நாட்டைச் சேர்ந்த 26 வல்லுநர்களும் 4 மோப்ப நாய்களும் கடந்த ஏப்ரல் 20ஆம் திகதி இங்கு வந்துள்ளனர். மொசாம்பிக் நாட்டைச் சேர்ந்த இந்த 26 பேரும் கண்ணி



வன்னியில் அகற்றப்பட்ட கண்ணிகள் குழி ஒன்றினுள் குவிக்கப்பட்டுள்ளன.

வெடிகளை அகற்றுவது தொடர்பான பயிற்சிகளை அமெரிக்காவில் பெற்றுள்ளனர். கண்ணிவெடிகள புதைக்கப்பட்டுள்ள இடங்களை முகர்ந்து அடையாளம் காட்டுவதற்கே பயிற்றப்பட்ட 4 மோப்ப நாய்கள் கொணடு வரப்பட்டுள்ளன.

இந்த வல்லுநர்களும் மோப்ப நாய்களும் அமெரிக்க ராஜாங்க அமைச்சின் கீழ் செயற்படும் 'விரைவாகச் செயற்பட்டு கண்ணிவெடிகளை அகற்றும் படை'யைச் சேர்ந்தவர்கள். (QUICK REACTION DEMINING FORCE).

கண்ணிவெடிகளை அகற்றும் வல்லுநர்கள் யாழ்ப்பாணம் சென்றதும் முதல் வேலையாக நிலக் கண்ணிகள் புதைக்கப்பட்டுள்ளன எனச் சந்தேகிக்கப்படும் இடங்கள் தொடர்பான வரைபடங்களை வரைந்தனர் என அந்தக் குழுவின் தலைவர் டொன் ஸ்மித் தெரிவித்தார். அமெரிக்க கடற்படையில் கப்டனாகப் பணியாற்றி ஓய்வுபெற்ற டொன் ஸ்மித் தலைமையிலான.குழுவில் வியட்நாம், பொஸ்னியா, கொசொவோ மற்றும் மொசாம்பிக் ஆகிய நாடுகளில் கண்ணிவெடிகளை அகற்றி அனுபவம் பெற்ற பலர் அடங்கியுள்ளனர்.

நான்கு மாதங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து கண்ணிவெடிகளை அகற்றவுள்ள இந்தக் குழுவினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் ஏராளம்.

யாழ்ப்பாணத்திலுள்ள நிலப்பரப்பில் சுமார் 2 சதவீதமான நிலப்பரப்பில் நிலக்கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன என ஐ.நா.அமைப்புத் தெரிவித்துள்ளது.

### பல நாடுகளில் கண்ணிவெடிகள்

உலகில் பல்வேறு நாடுகளில் பல்வேறு இடங்களில் நிலத்தின்கீழ் புதைக்கப்பட்டு மனிதர்களைப் பழி வாங்கக் காத்திருக்கும் நிலக் கண்ணிவெடிகளின் எண்ணிக்கை 70லட்சத்திற்குமேல் எனக் கூறப்படுகிறது. பிலிப்பைன்ஸ், அஸ்கோலா, கம்பூஜியா, லைபீரியா, ருவாண்டா, சிறிலங்கா ஆகிய நாடுகளில் நிலத்தின் கீழ் இக்கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. கண்ணிகள் புதைக்கப்பட்டுள்ள நிலப்பரப்பின் சதவீதத்தைக் கணக்கில் எடுத்தால் உலகில் மிக அதிகஅளவில் நிலக் கண்ணிகள் புதைக்கப்பட்டுள்ள நாடு சிறிலங்காவே ஆகும். இத்தகைய நிலக கண்ணிகளில் மிக அதிகமானவை யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலேயே புதைக்கப்பட்டுள்ளன.

யாழ்.குடாநாட்டில் நிலக்கண்ணிவெடி மீது மிதித்து கை, கால்களை இழக்கும் சாதாரண மக்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் இடமாக யாழ.மருத்துவமனை விளங்குகிறது. மிதிவெடியில் சிக்கி சிகிச்சை பெற யாழ்.மருத்துவமனைக்கு வருவோரின் தொகை நாளொன்றுக்குச் சராசரியாக 4 பேர்கள் என மருத்துமனைப் பணிப்பாளர் செல்வி எம்.கனகரத்தினம் தெரிவிக்கிறார்.

**தமிழில்: கஜனி**

நிலக் கண்ணிவெடியில் சிக்குவோருக்கு அதிர்ஷ்டம் இருந்தால் மாத்திரமே அவர்களின் உயிர் காப்பாற்றப்படுகிறது. கண்ணிவெடி மீது மிதிக்கும்போது அது வெடித்து ஏற்படும் அமுக்கம் காரணமாக நிலத்தடி மண் சூடேறி மேல்நோக்கி வீசப்படும்போது அந்தக் கண்ணிவெடியை மிதித்த அந்தத் துர்ப்பாக்கியசாலியின் உடலும் தசையும் தூக்கி வீசப்படுகிறது.

நிலக்கண்ணி வெடிப்பதால் ஏற்படும் பாதிப்புகளைத் தீர்மானிப்பவர் அந்த நிலக்கண்ணியை உற்பத்தி செய்தவரே ஆவார்.

அளவு, வெடிக்கும் ஆற்றல், பயன்படுத்தப்பட்டுள்ள வெடிமருந்து ஆகியன தொடர்பான தகவல்களை அந்த உற்பத்தியாளனே அறிந்திருப்பார். இவ்வாறு சுமார் 600 வகையான நிலக் கண்ணிவெடிகள் உலகெங்கும் புதைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், சிறிலங்காவில் படையினரும் விடுதலைப் புலிகளும் இரண்டு வகையான நிலக் கண்ணிகளை மட்டுமே பயன்படுத்துகின்றனர். அதாவது பாகிஸ்தான் தயாரிப்பு நிலக் கண்ணிவெடிகளும் விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்படும் 'ஜொனி' கண்ணிவெடிகளுமே அவை ஆகும்.

### கண்ணி அகற்றும் பணி

சிறிலங்கா இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்னர் சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கண்ணிவெடிகளை அகற்றும் குழுவினர் முதன் முதலாக யாழ்ப்பாணம் வந்தனர். இவ்விதமாக 1995 டிசெம்பர் மாதத்தில் சிம்பாப்வே நாட்டைச் சேர்ந்த 10 பேர் கொண்ட கண்ணிவெடி அகற்றும் குழுவினரும் 4 மோப்ப நாய்களுடன் வந்தனர். அவர்கள் சிம்பாப்வே நாட்டைச் சேர்ந்த "மைன் ரெக்" (MINE TECH) நிறுவனத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்களுக்கான நிதியை ஐ.நாவின் அபிவிருத்தித் திட்டக் குழுவினர் வழங்கினர்.

ஏனைய விலைவாசிகளோடு ஒப்பிடுகையில் நிலக் கண்ணிவெடிகள் மிகவும் மலிவானவை. சாதாரணமாக 300 ரூபாவுக்கு (3டொலர்கள்) நிலக் கண்ணிவெடிகளைக் கொள்வனவு செய்யலாம் அல்லது உற்பத்தி செய்யலாம். இருப்பினும், கண்ணிவெடிகளை அகற்றும் "மைன் ரெக்" போன்ற நிறுவனங்களுக்கு ஒரு கண்ணிவெடியை அகற்ற சுமார் 10 ஆயிரம் ரூபாவை (100 டொலர்கள்) செலுத்த வேண்டியுள்ளது.

"மைன் ரெக்" நிறுவனமும் தற்போது வந்துள்ள அமெரிக்கக் குழுவும் சிறிலங்காவில் கண்ணிவெடிகளை அகற்றும்போது ஒரேவிதமான வழிமுறையையே பின்பற்றுகின்றனர். அவர்கள் முதலில் விடுதலைப் புலிகள், அரச படையினர் மற்றும் பொது மக்களைச் சந்தித்து கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படும் இடங்கள் பற்றிய வரைபடங்களைத் தயாரிக்கின்றனர். அதன் பின்னர் மோப்ப நாய்களுடன் குறித்த இடங்களுக்குச் செல்கின்றனர். அவர்கள் உலோகங்களைக் கண்டறியும் கருவியையும் (METAL DETECTOR) எடுத்துச்செல்கின்றனர்.

கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு மோப்ப நாய்களைப் பயன்படுத்துவது மிகவும் பயன்தரும் நடவடிக்கையாகும். நிலக் கண்ணிவெடிகளைக் கண்டறிவதற்கு நாய்களைப் பயன்படுத்தும் போது அந்த நாய்கள் மனிதர்களை விட மும்மடங்கு வேகமாகச் செயற்படுகின்றன. நன்கு அனுபவமுடைய ஒரு கண்ணிவெடி மீட்பவரால் நாள் ஒன்றுக்கு சுமார் 20இல் இருந்து 50 சதுர மீற்றர் நிலப்பரப்பையே சுத்தம் செய்யமுடியும்.

தற்போது இங்கு வந்துள்ள 26 வல்லுநர்களும் 4 நாய்களும் அடங்கிய குழுவானது 30 ஊழியர்களைக கொண்ட குழுவாகும். இந்தக் குழுவினால் நாள் ஒன்றுக்கு சுமார் 1500இல இருந்து 2000 சதுர மீற்றர்வரையான நிலப்பரப்பைத் துப்புரவு செய்யமுடியும.

இவ்வாறு கண்ணிவெடிகள் மீட்கப்படும்போது கண்ணிவெடி வெடித்து மீட்பவர் காயப்பட்ட சம்பவங்களும் பல இடம்பெற்றுள்ளன. கண்ணிவெடி மீட்கும் வல்லுநர்களின் தகவல்களின்படி சராசரியாக 2000 கண்ணிவெடிகள் மீட்கப்படும்போது ஒரு கண்ணிவெடி வெடித்து மீட்பவர் காயமடைவதாகவும் சராசரியாக 5000 கண்ணிவெடிகள் மீட்கப்படும்போது மீட்பவர் ஒருவர் மரணமடைவதாகவும் தெரியவருகிறது.

தற்போது சிறிலங்காவில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள் 20 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கனவே கூறிய தகவல்களின்படி இந்த 20 லட்சம் கண்ணிவெடிகளை முற்றிலுமாக அகற்றுவதாயின் கண்ணிவெடி மீட்கும் வல்லுநர்கள் குறைந்தது 400 பேர் இறக்க நேரிடலாம். பயிற்சிபெற்ற வல்லுநர்கள் சுமார் ஆயிரம் பேர் காயமடையக்கூடும்.

உலகில் கண்ணிவெடிகளை அகற்றும் வல்லுநர்கள் எண்ணிக்கையில் ஆயிரத்திற்கும் குறைவாகவே உள்ளனர். சாதாரண ரகங்களைச் சேர்ந்த நிலக்கண்ணிகள் சுமார் 20 வருடங்களுக்குச் செயற்றிறன் கொண்



டனவாக இருக்கும். எனவே, அவற்றைப் புதைக்கப்பட்ட நிலையில கைவிடுவது புத்திசாதுரியமான எண்ணமாக இராது. மனித நடமாட்டமுள்ள இடங்களில் இருந்து அவை உடனடியாக அகற்றப்படவேண்டும்.

அண்மையில் வெளிவந்துள்ள தகவல்களின்படி சில ரகங்களைச் சேர்ந்த நிலக் கண்ணிகள் 125 வருடங்களுக்குச் செயற்றிறன் கொண்டனவாம். ஆனால், அதிர்ஷ்டவசமாக அந்த ரக கண்ணிகள் சிறிலங்காவல் புதைக்கப்படவில்லை என்றே கருதப்படுகிறது.

சர்வதேச அளவில் கண்ணிவெடிகளை மீட்கும் வல்லுநர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் அந்தந்தப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்குக் கண்ணிவெடிகளை மீட்பது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இருப்பினும், சிறிலங்காவில் அவ்வாறான பயிற்சிகள் இதுவரை வழங்கப்படவில்லை. தமக்குத் தெரிந்த வழிமுறைகளின்படி நிலக் கண்ணிவெடிகளை அகற்றித் தமது குடும்ப உறுப்பினர்களைக் காப்பாற்றும் பணியில் இந்நாட்டவர்கள் பலர் ஈடுபட்டுள்ளனர்.

### * வன்னியில் கண்ணி அகற்றும் பணி

கிளிநொச்சி மாவட்டத்திற்கு இனஹும் சர்வதேச மட்டத்திலான கண்ணிவெடி அகற்றும் வல்லுநர்கள் சென்றடையாத காரணத்தால் அங்குள்ள இளைஞர்கள் தமக்குத் தெரிந்த முறைகளை அனுசரித்து கண்ணிகளை அகற்றும் பணிகளை மேற்கொள்ளுகின்றனர்.

கிளிநொச்சியில் பாடசாலை மாணவர்களுக்குக் கண்ணிவெடிகளைக் கண்டறியும் முறை ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது. வெடிக்காத எறி



கணைகள், கைக்குண்டுகள் மற்றும் ஏனைய வெடிக்கும் உபகரணங்கள் குறித்து கிளிநொச்சிப் பகுதி மாணவர்களுக்குத் தற்போது போதிய அறிவு உண்டு.

இருப்பினும், கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் இந்தப் பாடசாலை மாணவர்கள் ஈடுபடவில்லை. உள்ளூர் இளைஞர்களே ஈடுபடுகின்றனர். அவர்களிடம் நவீன கருவிகள் இல்லை. அவர்கள் மூங்கில் தடியில் இணைக்கப்பட்ட கம்பிமூலம் நிலத்தைச் சுரண்டி கண்ணிவெடிகளைத் தேடுகின்றனர். பொருத்தமற்ற இந்த உபகரணத்தின்மூலம் கண்ணிவெடிகளைத் தேடும்போது கண்ணிவெடிகள் வெடிக்க வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. தமது அயலவர்களைக் கண்ணிவெடியில் இருந்து காப்பாற்றச் சென்று தாமே கண்ணிவெடியில் அகப்பட்ட இளைஞர், யுவதிகள் அப்பகுதியில் ஏராளம்.

### மீட்கப்படும் கண்ணிகள்

நிலக் கண்ணிகளை அகற்றுவதில் பயிற்சிகளைப் பெற்ற வல்லுநர்கள் நிலக்கண்ணிகள் புதைக்கப்பட்ட இடங்களைக் கண்டறிந்து, அந்தக் கண்ணிகளை வெடிப்பதற்கு இடமளிக்காது அகற்றுகின்றனர். அதன் பின்னர் அந்தக் கண்ணிகளைச் செயலிழக்கச் செய்து பல்வேறு இடங்களில் குவிக்கின்றனர். இவ்வாறான குவியல்கள் பலவற்றைத் தற்போது கிளிநொச்சிப் பகுதியில் காணமுடிகிறது.

மீட்கப்பட்ட சுமார் 20 ஆயிரம் நிலக்கண்ணிகள் அப்பகுதியில் உள்ளன. அப்பகுதிகளில் மூன்று மொழிகளிலும் எழுதப்பட்ட அறிவிப்புகளைக் காணமுடிகிறது. "அபாயம், கண்ணிவெடிகள் கவனம்" என அந்த அறிவிப்பில் எழுதப்பட்டுள்ளது. இவ்வாறான அறிவிப்புகளை நாட்டின் வேறுபகுதிகளில் காணமுடியவில்லை.

இவ்வாறான அறிவிப்புகள் உலகில் எந்தப் பகுதியிலாவது நாட்டப்படுவதை விரும்பாத 125 நாடுகள் உடன்பாடு ஒன்றைக் காணமுயன்றன. 1997இல் கனடாவில் ஒட்டாவா நகரில் கைச்சாத்தான நிலக்கண்ணித் தடை உடன்பாட்டில் அமெரிக்கா கைச்சாத்திடவில்லை. இருப்பினும், சிறிலங்காவில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிக்கான செலவினை அமெரிக்காவே மேற்கொள்கிறது.

யுத்தத்தில் ஈடுபடும் இருதரப்பாரும் பயன்படுத்தும் மிக மலிவான ஆனால் மிக ஆபத்தான யுத்த உபகரணம் நிலக் கண்ணிவெடிகளாகும். யுத்தம் முடிவடைந்த பின்னர் துப்பாக்கிகள் ஓய்வெடுக்கின்றன. இருப்பினும், யுத்தம் முடிவடைந்தாலும் யுத்த காலத்தில் புதைக்கப்பட்ட நிலக் கண்ணிவெடிகள் வெடிப்பதைத் தடுக்கவே முடியாது. ☆

## வாழ்வகம் - விழிப்புலன் வலுவிழந்தோர் இல்லம்

சுன்னாகம்

2002.05.14ஆம் திகதிய உதயன் பத்திரிகையின் நான்காம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட திரு.கே.ரகுநாத் என்பவரால் செய்யப்பட்ட விளம்பரத்தில், "*மருதனார்மடம் விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்தின் வளர்ச்சி நிதிக்காக நடத்தும் மாபெரும் இசைவிருந்து ....*" என்றுள்ளது. இவ்விளம்பரத்திற்கும் "*வாழ்வகம்*" விழிப்புல வலுவிழந்தோர் இல்ல நிர்வாகத்திற்கும் எதுவித தொடர்பும் இல்லை எனவும், திரு.கே.ரகுநாத் என்பவருக்கு வாழ்வக வளர்ச்சி நிதிக்காக இசை நிகழ்ச்சி நடத்துவதற்கு அனுமதி எதுவும் வாழ்வக நிர்வாகத்தால் வழங்கப்படவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**தலைவர்,**
வாழ்வகம் - விழிப்புலன் வலுவிழந்தோர் இல்லம்,
சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம். (சி-22381)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### திருமதி மரியமுத்து பூவிலிங்கம்

(இளைப்பாறிய உப அதிபர்)
(யா/ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் வித்தி., யாழ்.வேம்படி, கொழு/விவேகானந்தா, யா/முத்துத்தம்பி வித்தி.)

மண்ணில் 1935-07-10 — விண்ணில் 2002-05-04

அம்மா எம் அன்பு அம்மா - நின் அன்பு முகம்
மறைந்து ஆனதே திங்களொன்று
அன்பு மனம் மணம் வீசுதே உளமதில் நிதம்.

அப்பா மறைந்து ஆறு திங்கள் ஆகுமுன்னே
ஆவி நீ நீத்ததேனோ?
பத்தாவிற்கு ஏற்ற பத்தினியாய் - பாதைதான் தொடர்ந்தாயோ?
பச்சிளம் குழந்தைகட்கு பாசமுறு அம்மம்மாவாய்
பாசமுடன், நேசமாய் நீ வளர்த்த பிள்ளைகளையும் மறந்து

பாதியில் எமைவிட்டு ஏனம்மா பிரிந்தாய்?
பரலோகம் நின்று - எம்
பாதைக்கு நீ விளக்காவாய்.

*எமது குடும்பத்தின் தலைவியும் எமது அன்புத் தாயுமாகிய*

**மரியமுத்து பூவிலிங்கம்**

அவர்களின் திடீர் மரணச் செய்திகேட்டு நேரில் வந்து எமக்கு ஆறுதல அளித்தும், மரணச் சடங்கில் கலந்துகொண்டோருக்கும், விசேடமாக யாழ். மறை மாவட்ட ஆயர், குரு முதல்வர், குருக்கள், கன்னியாஸ்திரிகள், குருமட மாணவர்கள், யா/ஆனைப்பந்தி மெ.மிஷன், யா/வேம்படி, யா/பரியோவான் கல்லூரி, யா/புனித மரியாள் வித்தி., கல்லூரி சமூகத்தினருக்கும் யாழ்.பிரதேச செயலருக்கும், உத்தியோகத்தர்களுக்கும், சமுர்த்தி காரியாலய அதிகாரிகளிற்கும், உத்தியோகத்தர்களுக்கும், யா/பனை அபிவிருத்திச் சபைத் தலைவர், முகாமையாளருக்கும், உத்தியோகத்தர்களுக்கும், சகல விதமான உதவிகளையும் முன்னின்று உடனுக்குடன் செய்த அன்புள்ளங்களிற்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் 31ஆம் நாள் இரங்கற் திருப்பலி இன்று (03.06.2002) திங்கட்கிழமை முற்பகல் 11.00 (புதியநேரம்) மணிக்கு யாழ்.புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். இரங்கற் திருப்பலியிலும் பின்னர் எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன விருந்து உபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவரது பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

*இல.85, தேவாலய வீதி*
*(சப்பல் வீதி), யாழ்ப்பாணம்* (4440)

## மரண அறிவித்தல்

### குமாரசாமி சிவபாலசுப்பிரமணியம்

சரசாலை தெற்கு, மெய்கண்டான் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி சிவபாலசுப்பிரமணியம் (கோபால், மெக்கானிக்) அவர்கள் நேற்று (02.06.2002) ஞாயிற்றுக்கிழமை 7.00 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் ஷர்மிளா, காண்டீபன், ராதிகா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சுந்தரம், கமலாதேவி, கையிலாயபதி ஆகியோரின் சகோதரரும் செல்லையா கிருஸ்ணசாமி, வாமதேவன், மகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் தில்லைநாதன், சிவநேசன் ஆகியோரின் அன்பு மாமனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.06.2002) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

*சரசாலை தெற்கு,*
*சாவகச்சேரி.* (4445)

## மறவன்புலோ மாணவருக்கு!

மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் கல்வி கற்று தற்போது வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் தரம் 11 வகுப்பு மாணவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கவேண்டி உள்ளதால் நாளைமறுதினம் புதன்கிழமை கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்திற்கு வருகை தருமாறு அதிபர் ச.ஞானலிங்கம் கேட்டுள்ளார். (ம)

## தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தக் கோரிக்கை

குருநகர்,ஜூன்3

ஒரே பாடசாலையாக இணைக்கப்பட்ட யாழ்.திருக்குடும்ப கன்னியர் மட ஆங்கில பாடசாலையை தேசிய பாடசாலையாகத் தரம் உயர்த்துமாறு யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் க.சண்முகலிங்கத்திடம் கோரிக்கைவிடுத்துள்ளார்.

யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் ஆங்கில பாடசாலை, யாழ்.கன்னியர் மடம் ம.வி. ஆகியவைகளை ஒன்றாக இணைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட ஆங்கில பாடசாலையில் அதிபர் அருட்சகோதரி எம்.யோலண்ட் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய போதே யாழ்.ஆயர் மேற்கூறிய கோரிக்கையை வடக்குக் கிழக்கு மாகாணக் கல்விச் செயலரிடம் முன்வைத்தார். (ம-51)

## அபிவிருத்திப் பணிகள்

தென்மராட்சி,ஜூன்3

தென்மராட்சிப் பிரதேசத்தில் வரணி இடைக்குறிச்சி கிராமத்தை 'நிஜாப்' நிறுவனத்தினர் முன்மாதிரி கிராமமாகத் தெரிவுசெய்து அங்கு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

இப்பகுதியில் உள்ள குளங்களைப் புனரமைத்தல், வீதிகள் அபிவிருத்தி செய்தல், பொதுக் கட்டடங்கள் அமைத்தல், சுயதொழில் முயற்சிக் கடன்கள் வழங்கல் போன்ற அபிவிருத்தித் திட்டங்களை அந்த நிறுவனம் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## குளங்கள் புனரமைப்பு

தென்மராட்சி,ஜூன்3

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் மூன்று குளங்கள் 'நிஜாப்' நிறுவனத்தின் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன.

மாசார், முகாவில், தர்மக்கேணி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள குளங்களே புனரமைக்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் சு.புத்திசிகாமணி தெரிவித்தார். (ம-117)

## உலக சூழல்தின போட்டிகள்

குருநகர்,ஜூன்3

உலக சூழல் தினத்தை முன்னிட்டு அரியாலை அபிவிருத்திச் சங்கம் நாளைமறுதினம் புதன்கிழமை யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் பேச்சுப் போட்டி, கிராமிய சம்பாஷணை, வினாடி வினாப் போட்டிகளை நடத்தவுள்ளது.

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் இளைப்பாறிய நீதிபதி மு.திருநாவுக்கரசு முதன்மை விருந்தினராக கலந்துகொள்வார். அன்று பிற்பகல் 1 மணி தொடக்கம் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு வைபவமும் இடம் பெறும்.


யுனிசெவ் ஆதரவில் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் வழங்கும் 'நெஞ்சுறுத்தும் கானல்' எனும் நாடகமும் இடம்பெறும். (ம-51)

## மாநகர ஊழியர்களுக்கு இன்று நிரந்தர நியமனக் கடிதங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்3

யாழ். மாநகர சபையின் பல்வேறு பகுதிகளிலும் சமயாசமய ஊழியர்களாகப் பணிபுரிந்து வருபவர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் மாநகர சபையின் தலைமை அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என மேயர் செ.கந்தையன் தெரிவித்துள்ளார். (எ)

## கல்விச்சாலைக் காட்சிகள்



நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டியின் இடைவேளை நிகழ்ச்சியின்போது வித்தியாலய மாணவர்கள் கலந்துகொண்ட உடற்பயிற்சிக் கண்காட்சியைப் படத்தில் காணலாம். (ம-51)



தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயத்திற்கு மைதானம் ஒன்றை அமைப்பதற்காக வித்தியாலய அபிவிருத்திக் குழுவினரால் அண்மையில் காணி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு பாடசாலைக்கு வழங்கப்பட்டது.

மைதானத்திற்கான காணியின் உறுதியை பாடசாலை அபிவிருத்திக் குழுத் தலைவர் ச.கனகசபை வலிகாம வலய கல்விப் பணிப்பாளர் இராசையாவிடம் கையளிப்பதையும் அருகில் வித்தியாலய பழைய மாணவர் சங்க போசகர் மு.நமசிவாயம் நிற்பதையும் படத்தில் காணலாம். (ம-6)




கிளிநொச்சி புனித பற்றிமா றோ.க.பாடசாலையின் தற்போதைய தோற்றத்தைப் படத்தில் காணலாம். கிளிநொச்சி மீது இராணுவம் மேற்கொண்ட 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கை காரணமாக பெரும் அழிவுகளைச் சந்தித்த இப்பாடசாலை தற்போது பல வசதியீனங்களுடன் இயங்கிவருகிறது. (ம)



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பாடசாலைக் கொடியை அதிபர் மு.ஸ்ரீபதி ஏற்றி வைக்கிறார். பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சிப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.வேணுகோபாலும் அருகில் உள்ளார். (ம-173)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜுன்3

ஊர்காவற்றுறை புளியங்கூடல் செருத்தனைப்பதி அருள்மிகு ஸ்ரீ மகாமாரி அம்பாள் கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் இம்மஹோற்சவத்தின் ரதோற்சவம் எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கும் தீர்த்தோற்சவம் மறுநாள் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கும் இடம்பெறுவதுடன் மஹோற்சவம் நிறைவுறும். (ம-173)

★ ★ ★

வல்வெட்டித்துறை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

இக்கும்பாபிஷேகத்தை கோயிலின் பிரதம குருவான பிரதிஷ்டா சிரோமணி சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் பிரதம குருவாக இருந்து நடத்திவைப்பார்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாள்கள் மண்டலாபிஷேகமும் இடம்பெறும். (ம-173)

## சேவை நலன் பாராட்டு விழா

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையின் அதிபராகவிருந்து ஓய்வு பெற்ற கணபதிப்பிள்ளை சண்முகலிங்கத்தின் சேவைநலன் பாராட்டுவிழா இன்று பி.ப. 2.30மணிமுதல் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் த.இராஜலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

வாழ்த்துரைகளை கலாநிதி குகஸ்ரீ கா.சொக்கலிங்கம் (சொக்கன), மயிலங்கூடலூர் பி.நடராசன் (ஆடலிறை) ஆகியோரும், பாராட்டுரைகளை வித்தியாலய உப-அதிபர் திருமதி யோ.தேவசுந்தரம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் ஆகியோரும் நிகழ்த்துவர். (எ)

## சத்துணவுக் கூடத்துக்கு அரைக்கும் ஆலை

வடமராட்சி,ஜுன்3

வடமராட்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்திச் சங்கத்தினால் நடத்தப்படும் சத்துணவுக் கூடத்துக்கென தனியான அரைக்கும் ஆலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

சததுணவுக்கூடத்தினால் தயாரித்து விற்பனை செய்யப்படும் சத்துணவுக்குத தேவையான பல்வேறு தானியங்களை அரைத்து மாவாகப் பெற்றுக் கொளள வசதியாகவே இந்த அரைக்கும் ஆலை நிறுவப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதான வீதியில் அமைந்துள்ள சத்துணவுக் கூடத்தின் ஒரு பகுதியில் அரைக்கும் ஆலைக்கான இயந்திரங்கள் பொருத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டுவருகின்றன. (ம-173)

## சைவசமயபாட கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜுன்3

யாழ். கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் சைவசமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சைவ பரிபாலன சபை ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கு இன்று காலை 8.30 மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் தொடக்கவுரையையும், யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா நிறைவுரையையும் நிகழ்த்துவர்.

முன்னாள் அதிபர்களான சைவப் புலவர் சு.செல்லத்துரை, திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம், சைவப் புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை மற்றும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் செ.திருநாவுக்கரசு, பெரியபுலம் மகா வித்தியாலய அதிபர் செல்வி அ.கந்தையா ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் 11வரையான வகுப்புக்களில் சைவசமயம் கற்பிக்கும் ஆசிரியர்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டு பயன்பெறலாம் எனச் சைவ பரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் சைவப் புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (எ)

## தண்ணீர்த் தாங்கி போராட்டம் முடிவு

புத்தளம்,ஜுன்3

60 அடி உயரமான தண்ணீர் தாங்கியின் மேல் ஏறியிருந்து நான்கு நாள்களாகப் போராட்டம் நடத்திய ஆசிரியர், தனது கோரிக்கை நிறைவேற்றப்பட்டதை அடுத்து கடந்த 31ஆம் திகதி கீழே இறங்கினார்.

புத்தளம் மஸ்ஜீத் வீதியிலுள்ள தண்ணீர்த்தாங்கியில் ஏறியிருந்து போராட்டம் நடத்திய ஏ.கே.ஏ.ஹாதி என்னும் அந்த ஆசிரியருக்குச் சொந்தமான காணி மீண்டும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சிறாம்பியடி என்ற இடத்தில் உள்ள 8 ஏக்கர் தென்னங்காணியையும் 10 ஏக்கர் காட்டு நிலத்தையும் முன்னாள் பொலீஸ் அதிகாரியான ஏ.குலரத்ன என்பவரிடமிருந்து மீண்டும் பெற்றுத் தரவேண்டுமென்று அவர் கோரியிருந்தார். (ஐ)



ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ். கிளையில் 'விசா' மற்றும் 'மாஸ்ரர் காட்' கடன் அட்டைகள் விநியோக ஆரம்பநிகழ்வு, நேற்று இடம்பெற்றது. அதில் வங்கியின் வடபிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் எஸ்.சோதிலிங்கம் வாடிக்கையாளர் ஒருவருக்கு கடன் அட்டையை வழங்குவதைப் படத்திற்காணலாம். கடன் அட்டைகள் பிரிவின் பிரதம முகாமையாளர் பி.சிறீதரன் (வலது) வங்கி அதிகாரி சி.சுந்தரேஸ்வரன் (இடது) ஆகியோரும் படத்தில் உள்ளனர். (ஒ)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜுன்3

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் யாழ். இந்துக் கல்லூரியில் நடத்தி வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நாளை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் பற்றீசியன் அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி மோதவுள்ளது. (எ-ரி)

★ ★ ★

கோப்பாய் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் இன்றும் நாளையும் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30மணி முதல் ஆரம்பமாகி நடைபெறும்.(எ-72)

## எரிகாயங்களுடன் இருபெண்கள் ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம்,ஜுன்3

தமக்குத்தாமே தீமூட்டி எரிந்ததாகத் தெரிவித்து உடல்பூராகவும் எரிகாயங்களுக்குள்ளான நிலையில் இரு பெண்கள் நேற்றுமுன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் நீண்டகால மனநோயாளி எனவும், மற்றொருவர் தனது தாய் ஏசியதால் தனக்குத் தானே தீ மூட்டியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-15)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னையின் மடியிலே 01 - 01 - 1918



இறைவனின் அடியிலே 04 - 05 - 2002

### அமரர் சிதம்பரப்பிள்ளை செல்லத்துரை

(ஓய்வூதியர் - பொலீஸ் திணைக்களம்)

அன்பின் ஜோதியாய் அறத்தின் வழி நின்று எம்மையெல்லாம் பண்புடனும பாசத்துடனும் வளர்த்தெடுத்து ஆளாக்கிவிட்டு இறைவனின் திருப்பாதம் எய்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் குடும்பத் தலைவனின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (03.06.2002) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அதனையொட்டி இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*பழைய தபாலக*
*முன் ஒழுங்கை*
*(பகவான் பாதை),*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

(4448)

பிரிவால் துயருறும்:
மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 19 - 07 - 1973



மண்ணின் மடியில் 15 - 05 - 2001

### செல்வன் சிவசிதம்பரம் சிவசீலன்

(எழில்ச்செல்வன்)

திதி: 03-06-2002

அன்புக்கும் பண்புக்கும்
இலக்கணமானவனே சீலா
அகவை ஒன்றானதடா எமை நீ பிரிந்து!
எங்கு சென்றாலும் நடப்பது தான்
நடக்கும் என்றாயே!
அப்போது அறிவாயோ உன் வாழ்வு
முடியுமென்று சில பொழுதில்
விழிகளில் நீர்த் துளிகளுடன்...

*உன் ஆத்ம சாந்திக்காய் இறைவனை*
*வேண்டி நிற்கும்:*

*சுழிபுரம் மேற்கு,*
*சுழிபுரம்.*

(4452)

- சுழிபுரம் நண்பர்கள்.


உ
சிவமயம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஆதரவில்

இலக்கியப் பொதுக்கூட்டம்

இடம் : நாவலர் ஆச்சிரம மண்டபம்
கல்லூரி வீதி, நீர்வாவியடி, யாழ்ப்பாணம்.

காலம் : நாளை (04.06.2002) செவ்வாய்க்கிழமை பி.ப. 5 மணி

தலைவர் : திரு.இ.மகேந்திரன்
(தலைவர், யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை)

தமிழ்நாட்டிலிருந்து யாழ்நகர் வந்துள்ள தமிழறிஞர்கள்
முனைவர் தமிழப்பன்
திரு.கருணைதாசன்
திரு. குரு ஆறுமுகம்
திரு. துரை இராமநாதன்
திரு. ந.கணேசன்
இக்கூட்டத்தில் உரை நிகழ்த்துவார்கள்.

ஆர்வலர் அனைவரும் வருக.

சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம்,
2002-06-02.

(C/22383)

சைவப் புலவர் வ.கந்தசாமி,
தேர்வுச் செயலர்.


# மரண அறிவித்தல்

### சுந்தரலிங்கம் திவாகரன் (கண்ணன்)

(மாவட்ட செயலகம், மன்னார்)

யாழ்ப்பாணம் 137/1 ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்தவரும் மன்னாரில் வசித்தவருமான சுந்தரலிங்கம் திவாகரன் (கண்ணன்) அவர்கள் 29.05.2002 காலமானார்.

அன்னார் சுந்தரலிங்கம் (மெக்கானிக்) - அருந்ததி ஆகியோரின் அன்புப் புதல்வனும் கலைமதி (வைத்தியசாலை, மன்னார்) அவர்களின் அன்புக் கணவரும் கௌரீசன் அவர்களின் அன்புத் தந்தையும் கவிதா (லண்டன்), அகிலன் (கனடா), அகலிகை (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.05.2002 மன்னாரில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*17/2, கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(4453)

தகவல்:
மா.ஜீவானந்தன்

### கனகசபை நாகரத்தினம்

காரைநகரைப் பிறப்பிடமாகவும் பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை நாகரத்தினம் நேற்று (02.06.2002) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - செல்லாச்சி தம்பதிகளின அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - பாய்க்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சகுந்தலாவின் அன்புக் கணவரும் அனோபாயன், சஞ்சீவன் நிருபா, பிருந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.06.2002) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கொழும்பில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கனத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொழும்பு.*

(4455)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.


நாகம்ஸ் சுன்னாகம்
மாதவன், சிம்ரன், பிரகாஷ்ராஜ்
நடிப்பில்
கன்னத்தில் முத்தமிட்டால்
(ரீலஸ்)
காட்சிகள்: 11.00,3.00 (புதிய நேரம்)
(4418)

நிறஞ்சனாஸ்
சங்கானை
சுப்பர்ஸ்ரார் ரஜனி, நக்மா,
ரகுவரன் மற்றும் பலர் நடித்த
பாட்ஷா
காட்சிகள்: 10.30, 2.30, 5.30
(C-22357)

ராஜா யாழ்ப்பாணம்
3முதல் 6 வரை
ரஜனி, மீனா, கவுண்டமணி, செந்தில்
நடித்த
எஜமான்
தினசரி: 10.30, 2.30, 5.30 (C/22356)



இலக்கிய பயணத்தை மேற்கொண்டு யாழ். விஜயம் செய்துள்ள தமிழக அறிஞர் குழு நேற்று நல்லை ஆதீன மண்டபத்தில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தியது. அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

முறையே இடமிருந்து வலமாக ந.கணேசன், குரு.ஆறுமுகம், சைவப்புலவர் வ.கந்தசாமி, குழுத் தலைவர் தமிழப்பன், அ.கருணைதாசன், துரை.இராமநாதன் ஆகியோர் காணப்படுகின்றனர். (படங்கள்:ரமா)

# இலங்கையில் நிலையான அமைதி; இந்திய மக்களின் விருப்பம் இதுவே!

## யாழ். வருகை தந்துள்ள தமிழக அறிஞர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்3

தற்போது ஈழத்தில் ஏற்பட்டுள்ள அமைதிச் சூழல் மேலும் விருத்திய டைந்து விரைவில் நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும்.

அந்த நாள்களை இந்திய மக்களாகிய நாம் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றோம்.

- இவ்வாறு தமிழ்நாட்டில் இருந்து இலக்கியப் பயணத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருகைதந்துள்ள தமிழக அறிஞர் குழுவின் தலைவரும், உலகத் தமிழ் நூலக அறக்கட்டளை நிறுவன அறங்காவலருமான புலவர் தமிழப்பன் தெரிவித்தார்.

நேற்று மாலை நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இம்மாநாட்டில் தமிழக அறிஞர்களுடன் சைவபரிபாலன சபையின் பரீட்சைச் செயலர் சைவப்புலவர் வ. கந்தசாமியும் கலந்துகொண்டார்.

புலவர் தமிழப்பனார் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் இங்கு வருகை தருவதற்கான சந்தர்ப்பத்தை நீண்டகாலத்தின் பின் ஏற்பட்டுள்ள அமைதிச் சூழல் எமக்கு வழங்கியுள்ளது.

கடந்த 20 வருடகாலமாகத் தொடரும் யுத்த சூழல் காரணமாகப் பொருளாதாரரீதியிலும், சமூகரீதியிலும் ஈழத்தமிழர்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை தற்போது எம்மால் அறிந்துகொள்ள முடிந்துள்ளது.

இங்குள்ள நிலைமைகளை வெளியுலகிற்குத் தெரியப்படுத்துவதில் நாம் முன்னின்று செயற்படுவோம்.

சமாதான முயற்சிகள் முன்னேற்றகரமாக நகர்ந்துகொண்டு செல்கின்ற அருமையான இந்தச் சந்தர்ப்பத்தில், அரசியல்வாதிகள் அமைதி பேணிக் கொள்வதே நல்லது.

தேவையற்ற கருத்துக்களைக் கூறி, அவை சமாதான முயற்சிகளுக்கு குந்தகமாக அமைந்துவிட்டால் அதனால் பாதிப்படைவது பொது மக்களே!.

தமிழகத்துடன் மிகநெருங்கிய கலாசாரத் தொடர்புகளைக் கொண்ட நாடு என்பதாலும் அயல்நாடு என்ற விதத்திலும் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாக இந்திய மக்கள் மிகவும் கரிசனை கொண்டுள்ளனர். அவர்கள் ஈழத்தில் போர் ஓய்ந்து, அமைதி தவழும் நாளை எண்ணிக் காத்துக்கொண்டிருக்கின்றனர்- என்றார்.

இயற்கை மருத்துவர் ந.கணேசன் (புதுவை), திருக்குறள் இயக்கத் தலைவரும், கவிஞருமான துரை.இராமநாதன் (சென்னை), 'தமிழ்ப்பாவை' ஆசிரியர் புலவர் அ.கருணைதாசன் (மதுரை), சுற்றுச்சூழல் ஆய்வாளர் குரு.ஆறுமுகம் (சேலம்) ஆகியோரும் நேற்றைய செய்தியாளர் சந்திப்பில் தமது கருத்துக்களை வெளியிட்டனர். (எ-9)

## கடல்வலய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நபருக்கும் எதிராக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படும்.

குற்றவாளியாகக் காணப்படும் பட்சத்தில் மூன்று மாதங்களுக்கு குறையாத - ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத - கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படலாம். 5 லட்சம் ரூபாவுக்கு மேற்படாத அபராதமும் விதிக்கப்படும்.

திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய நிர்வாக மாவட்டங்கள் கட்டுப்பாட்டுப் பகுதிகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றன.

வடக்கு - கிழக்கில் துறைமுகங்களையும் பிரதான படைமுகாம்களையும் சுற்றியுள்ள கடல் பகுதிகளாக இவை இருக்கும்.

கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எந்த ஒரு நபரையோ, படகையோ, கப்பலையோ அடையாளம் காண்பதற்கு பொலீஸாரோ, ஆயுதப்படையினரோ நிறுத்தும் அதிகாரத்தைக் கொண்டிருப்பர்.

பொலீஸாரோ, ஆயுதப்படையினரோ வழங்கும் உத்தரவுக்கு கட்டுப்படமறுக்கும் நபரையோ, படகையோ நிறுத்த தேவையான நடவடிக்கையை மேற்கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

உத்தரவுக்குக் கட்டுப்பட மறுத்ததன் விளைவாக மரணமோ, காயமோ, சேதமோ ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட நபர்கள் எந்த ஒரு நஷ்டஈட்டையும் பெற முடியாது.

- இவ்வாறு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் விதிகள் தெரிவிக்கின்றன. (ஐ-9)

## மட்டக்களப்பு கொம்மாந்துறையில்

# ஆலயங்கள் திறந்தபோதும் வழிபட வசதி இல்லை

மட்டக்களப்பு,ஜூன்3

மட்டக்களப்பில் படையினர் வெளியேறியுள்ள இந்து ஆலயங்கள், பாடசாலைகள் ஆகியனவற்றை கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் நேற்று முன்தினம் நேரில் பார்வையிட்டனர்.

மட்டக்களப்புக்கு விஜயம்செய்த கண்காணிப்புக் குழுவினரை படையினர் அழைத்துச்சென்று ஆலயங்களையும், பாடசாலைகளையும் காட்டினர்.

மட்டக்களப்பு கொம்மாந்துறை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், ஸ்ரீதேவி அம்மன் ஆலயம் ஆகியன திறந்து விடப்பட்டுள்ளபோதிலும் அவற்றைச் சுற்றி தடை முகாம்களும், முட்கம்பி வேலிகளும் அகற்றப்படவில்லை. ஒற்றையடிப் பாதை ஊடாகவே சித்தி விநாயகர் ஆலயத்துக்கு செல்லமுடிகிறது.

ஸ்ரீதேவி அம்மன் ஆலயம் படைமுகாமினுள் அமைந்துள்ளது.

இந்த ஆலயங்களுக்குச் செல்ல பரிபாலன சபையினருக்கு மட்டுமே படையினர் அனுமதி வழங்கியுள்ளனர். (ஐ)

## வெளிநாடுகளோடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சித் தலைவர்களிடம் விளக்கம் கோரவுள்ளதாக அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார்.

அமெரிக்கா மற்றும் இந்தியாவின் தலையீடுகள் சமாதான முயற்சிக்கு ஆதரவாக - பக்கபலமாக - அமையுமானால் தமிழ்மக்கள் அவற்றை ஒரு போதும் எதிர்க்கப்போவதில்லை. ஆனால், அதற்கு விடுதலைப் புலிகளின் தலைமையின் விருப்பத்தை அரசு பெற்றுக்கொள்ளவேண்டும்.

ஐக்கிய இலங்கைக்குள் சமாதான வழியில் தீர்வு ஒன்றைக் காண இணங்கி, அரசுடன் புலிகள் முக்கியமான உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ளனர். அதனை அவர்கள் நேர்மையாகக் கடைப்பிடித்து வருகின்றனர். இந்நிலையில் வெளிநாடுகளுடன் அரசு செய்யும் உடன்படிக்கைகள் இருதரப்பு நல்லெண்ணத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தி விடக்கூடாது.

இது விடயத்தில் புலிகளின் தலைமையின் விருப்பத்தை அறிந்து நடக்க அரசு தவறும் பட்சத்தில் அதற்கு தமிழ்மக்கள் தங்கள் எதிர்ப்பை வெளிக்காட்ட தயங்கமாட்டார்கள்.

- இவ்வாறு மத்திய குழுவிடம் சமர்ப்பித்துள்ள பிரேரணையில் அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்திருக்கிறார்.

## பக்கிங்ஹாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீ எவ்வாறு ஏற்பட்டது என்பது உடனடியாகத் தெரியவில்லை. பொன் விழா கொண்டாட்டங்களுக்காக அரண்மனையின் உள்ளே செய்யப்பட்ட பிரமாண்டமான ஏற்பாடுகள் காரணமாகத் தீ பரவியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. அலங்கார வேலைகளில் ஈடுபட்டிருந்த நூற்றுக்கணக்கான பணியாளர்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

லண்டன் பொலீஸார் மற்றும் தீயணைப்புப் படையினரின் வழிகாட்டலின் கீழ் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தீ அனர்த்தம் பற்றிய செய்தி பரவியதும் அரண்மனை நோக்கிப் படையெடுத்து வந்த பொதுமக்களைப் பொலீஸார் தடுத்து நிறுத்தினர்.

இரண்டாம் உலக யுத்தத்துக்கு பின்னர் பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து ஆள்கள் கூண்டோடு வெளியேற்றப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை என்று 'ரொய்ட்டர்' செய்தி நிறுவனம் தெரிவித்தது. (ஐ)

# ஹெலி விபத்தில் உ5பேர் பலி!

லுவாண்டா,ஜூன்3

அங்கோலாவின் கிழக்குத் தலைநகரில் இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று மரத்துடன் மோதி வீழ்ந்து நொறுங்கியதில் 25 பேர் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களில் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளும் மற்றும் சில பத்திரிகையாளர்களும் அடங்குகின்றனர்.

சமாதான நடவடிக்கைகளின் முன்னெடுப்பாக யுனிட்டா தீவிரவாதிகளின் ஆயுதக் கையளிப்பு தொடர்பான நிகழ்வில் பங்குபற்றச் சென்றோரே இவ்வாறு விபத்தில் கொல்லப்பட்டவர்களாவர்.

ஹெலிகொப்டரின் கறுப்புப் பெட்டியைத் தேடும்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

# மீன்பிடி கட்டுப்பாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி அரசுக்கும் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் சுமுகமான முறையில் தொழில் செய்ய வாய்ப்புக் கிடைக்கும் என வடமராட்சி மீனவர்கள் நம்பிக்கை கொண்டனர்.

ஒப்பந்தத்தின் பிரகாரம் மீன்பிடிப்பதற்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும், ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த 90ஆவது நாளிலிருந்து மீன்பிடிப்பதற்கான கட்டுப்பாடுகள் முற்றாக நீக்கப்பட்டு பகலிலும் இரவிலும் மீன் பிடிக்க அனுமதிக்கப்படும் என மீனவர்கள் நம்பியிருந்தனர்.

ஆனால், ஒப்பந்தம் ஏற்பட்டு 99 நாளாகியும் மீனவர்கள் சுதந்திரமாகத் தொழில் செய்யக்கூடிய நிலைமை உருவாகவில்லை.

பாஸ் அனுமதி பெற்றே தொழில் செய்ய வேண்டியுள்ளது.

இரவு நேரம் கடலிலிருந்து கரை திரும்பினால் சுட்டுவிடுவோம் என இராணுவத்தினர் எச்சரிக்கின்றனர்.

வள்ளங்களில் வெளி இணைப்பு இயந்திரங்கள் பாவிப்பவர்கள் அவற்றை இராணுவ முகாமில் பதிவு செய்ய வேண்டும். அதன்பின்பே பாஸ் வழங்கப்படும்.

பாஸ் பெறாமல் கடலுக்குச் செல்லும் வள்ளங்கள் கடற்படையினரால் திருப்பி அனுப்பப்படுகின்றன.

வடமராட்சிப் பகுதியில் சுப்பர்மடம் தொடக்கம் கற்கோவளம் வரையிலான பகுதியில் அதிகாலை 4மணி தொடக்கம் 6மணிவரையும் -

சுப்பர் மடத்திலிருந்து மேற்குப் பக்கமாக தொண்டமனாறு வரையான பகுதியிலும் -

வள்ளமும், இயந்திரமும் பாவித்தால் 'பாஸ்' அனுமதி பெற்றுத்தான் தொழில் செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தப்படி 90ஆவது நாளில் சுதந்திரமாகத் தொழில் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும். ஆனால் இப்போதும் பாஸ் நடைமுறை, தொழில உபகரணங்களைப் பதிவு செய்தல் போன்ற நடவடிக்கைகள் மீனவர்களை அசௌகரியப்படுத்தி, சிரமப்படுத்தி வருகின்றன.

இது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயலாகும்.

இந்நிலை நீடிப்பதனால் - சுதந்திரமாக கடற்றொழில் செய்ய தடைகள் ஏற்படுவதனால் - ஒப்பந்த மீறலுக்கு எதிரான வகையில் - சாத்வீகமான முறையில் - எமது எதிர்ப்பினைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

எனவே, வடமராட்சி கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாக கடற்றொழில் செய்ய அனுமதிக்குமாறு வேண்டுகிறோம்.

இல்லையேல் எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலையிலிருந்து மாலை வரை மீனவர்கள் ஒன்றிணைந்து யாழ்.செயலகம், கண்காணிப்புக்குழு அலுவலகம் முன்பாக ஒப்பந்த மீறலுக்கு எதிரான மீனவரின் ஆட்சேபத்தை மறியல்போராட்டத்தின் மூலம் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றனர் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-173)

## சமாதானத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களது செயற்பாடு அதிகரித்து வருகிறது. இதனை இச்சபை கவனிக்க வேண்டும் "புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி படையினர் பொது இடங்களை விட்டு வெளியேற வேண்டும். பாணமை தமிழ் வித்தியாலயத்தில் அதிரடிப்படை இருப்பதால் தமிழ் மாணவரின் கல்வி பாதிக்கப்படுகிறது. அக்கரைப்பற்று ஆஸ்பத்திரியிலிலுள்ள படையினரும் வெளியேற வேண்டும்" - என்றார்.

படையினர் படிப்படியாக பொது இடங்களை விட்டு வெளியேறுவர் என்று அதிகாரிகள் கூறினர். (ஐ)


மேலும் ஒரு பிரிவு
ஆரம்பம்: 07-06-2002
பி.ப. 3 p.m.
OXFORD ENGLISH ACADEMY (4414)
P.K. Lane,
Point pedro.

புதிய பிரிவு
SUBRA
சித்தன்கேணி.
English
Spoken with Grammar
By: BRITTO
04.06.2002 (Tue.) காலை 7.00
அனுமதிக்கு முந்துங்கள்
பேச்சுச் சிங்களம்
லீலாகிருஷ்ணன்
Tue., Thu. 8-9 (C/22366)

பிறைற்றின் கல்வி நிலையம்
சங்கத்தானை.
A/L 2003, 2004
கலை, வர்த்தக பிரிவுகள் ஆரம்பம்
* தமிழ் - அகிலன்
* இந்துநாகரீகம் - இராஜேஸ்கன்னா
* அளவையியல் - S.R.J.சுதன் பவன்
* புவியியல - கிரிதரன்
* கணக்கீடு - தவா சத்தி
* பொருளியல் - விஜயரத்தினம் விக்கி
* வணிகக்கல்வி - பிரபல ஆசிரியர்
* வரலாறு - பார்த்தீபன்
* வணிகப் புள்ளிவிபரவியல் - நவனேசன்
ஆரம்பம்: 05.06.2002
புதன் 3.30p.m. (பழைய நேரம்)
கணித, உயிரியல் பிரிவுகளுக்கான வகுப்புகள் நடைபெறுகின்றன.
தரம் 8-11 வரையான வகுப்புகள் நடைபெறுகின்றன.
- நிர்வாகி.
(4437)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.06.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.